Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 19 05 - 12 - 94 திங்கட்கிழமை ஓசை 290

## ஏகாதிபத்திய சின்னங்களாக செங்கோலும் சிம்மாசனமும்

சிறிலங்கா பாராளுமன்றத்தில் உபயோகத்தில் உள்ள செங்கோலும், சபாநாயகர் அமரும் சிம்மாசனமும் பிரிட்டிஷ் அரசினால் இலங்கைக்கு வழங் ப்பட்டவையாகும். 1815ஆம் ஆண்டிலிருந்து இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியில் அதன் குடியேற்ற நாடாக இருந்து வந்தது. 1948 ஆம் ஆண்டு இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றதை முன்னிட்டு பிரிட்டிஷ் அரச பரம்பரையின் ஞாபகச்சின்னமாக இருக்க வேண்டும் என்பதற்காக 1947 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி பிரிட்டிஷ் அரச பரம்பரையின் சார்பில் இவ்விரு பொருட்களும் இலங்கைக்கு வழங்கப்பட்டன. 1956ஆம் ஆணடு எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்க ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை இலங்கையின் மகாதேசாதிபதியை (6ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கக் குழுவில் லயனல் நீக்கப்படலாம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அரசதரப்புத் தூதுக்குழுவில் இருந்து திரு. லயனல் பெர்ணாண்டோ வெளியேற்றப்படலாம் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் மாத இறுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களின்போது திரு. லயனல் பெர்ணாண்டோவுக்குப் பதிலாக புதியவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். முதலாம் கட்டப் பேச்சுக்களின்போது ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டும், இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது ஆராயப்படவிருக்கும் விடயங்களைப் பொறுத்தும் இம் மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க, நி)

## பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு சாத்தியமில்லை; புலிகளை புறக்கணித்து தீர்வு காணமுடியாது!

### முன்னாள் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றே காணப்பட வேண்டும். இதற்கு இராணுவத் தீர்வொன்றைக்காணமுடியாது. மேலும் சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகளின் பங்களிப்பு முக்கியமானது. விடுதலைப் புலிகளை தவிர்த்து எந்தத் தீர்வும் நிரந்தரமாக அமைய முடியாது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஏ. சி. எஸ். ஹமீட் கொழும்பு தமிழ் வார இதழொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அவர் அளித்துள்ள பேட்டியின் முழுவிபரம் வருமாறு;

கேள்வி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான முயற்சிகளை பொதுஜன ஐக்கிய முன்னணி ஆரம்பித்துள்ளது. இவ்விடயத்தில் ஐ தே. கவின் நிலைப்பாடு என்ன?

பதில்: யுத்தத்தின் மூலமாக தீர்வொன்றைக்காண முடியாது. அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகள் மூலமே இப்பிரச்சினைக்குதீர்வு காண முடியும். இவ்வாறான தீர்வொன்று காண முடியாவிட்டால் இலங்கையின் எதிர்காலம் சுபீட்சமாக அமைய மாட்டாது. வெளிநாட்டு (6ஆம் பக்கம் பார்க்க)

# 4 பிரிகேடியர் உட்பட 38 ராணுவ அதிகாரிகளை கட்டாய ஓய்வில் செல்லுமாறு உத்தரவு!

## களை எடுப்பு என்கிறது கொழும்பு பத்திரிகை

(கொழும்பு)

இராணுவத்தில் பணியாற்றும் நான்கு பிரிகேடியர்கள் உட்பட 38 இராணுவ அதிகாரிகளை கட்டாய ஓய்வில் அனுப்புவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தில் களையெடுப்பு நடவடிக்கையாக இவர்கள் கட்டாய ஓய்வில் அனுப்பப்படுவதாகக் கொழும்பு வாரப்பத்திரிகையொன்று தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது. இவ் இராணுவ அதிகாரிகளுடன், ஆறு உயர் பொலிஸ் அதிகாரிகளும் பதவி விலகவேண்டி வரலாம் எனவும் தெரி

## கல்முனை கடற்பரப்பில் மீனவர்மீது ராணுவம்-கடற்படை தாக்குதல்

### ஒருவர் பலி; ஒருவரைக் காணவில்லை

(குருநகர்)

கல்முனைக்கு அப்பால் மீன் பிடித்துக்கொண்டு நின்றவர்கள் மீது

மணியளவில் பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதில் ஒரு மீனவர் கொல்லப்பட்டார்.

மற்றொரு மீனவர் கடலில்

களும் சேதமடைந்தன.

நான்கு மீனவர்கள் மயிரிழையில் தப்பி நீந்திக் கரை வந்தனர்.

களை கட்டாய ஓய்வில் அனுப்புவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தில் களையெடுப்பு நடவடிக்கையாக இவர்கள் கட்டாய ஓய்வில் அனுப்பப்படுவதாகக் கொழும்பு வாரப்பத்திரிகையொன்று தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது. இவ் இராணுவ அதிகாரிகளுடன், ஆறு உயர் பொலிஸ் அதிகாரிகளும் பதவி விலகவேண்டி வரலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அப்பத்திரிகையில்; இந்த நிர்ப்பந்தம் பல விபரீதங்களுக்கு இடம் அளிக்கும் எனினும், இராணுவ வட்டாரங்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 38 அதிகாரிகள் கட்டாய ஓய்வைப்பெற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகளில் நான்கு பேர் பிரிகேடியர் தரத்தைச் சேர்ந்தவர்கள். இராணுவத்தில் இருந்து இவர்கள் அதிக சலுகைகளைப் பெறுவதாகக் கூறப்படுகிறது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களை அரச சேவையிலிருந்து விலக்கி விடுவது என்ற முடிவு இராணுவத்தினருக்கும் விரிவாக்கப்படுவதை தொடர்ந்தே இவர்களுக்கு இந்த நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இராணுவத்திலிருந்து இளைப்பாறி செல்ல இருப்பவர்களில் நான்கு பிரிகேடியர்கள், ஒரு கேணல், இரண்டு லெப். கேணல்கள், ஐந்து மேஜர்கள், இருபத்தேழு கப்டன்கள், மூன்று லெப்டினன்ட்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர். கடற்படை, மற்றும் விமானப்படை என்பவற்றில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எவரும் இல்லாததால் அவர்களில் எவரும் இளைப்பாறும் படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இதேவேளை பொலிஸ் படையை சேர்ந்த ஆறுபேரும் இந்த திட்டத்தின் கீழ் இளைப்பாறவேண்டி இருப்பதாகவும் கூறப்படுகிறது. இராணுவ சேவையில் இருந்தோர் 65 வயதுவரை சேவை நீடிப்பைபெற முடியும். ஆனால் கட்டாய ஓய்வு பெற நிர்ப்பந்திக்கப்பட்டிருப்

[6ஆம் பக்கம் பார்க்க]

# பொலிசாரை இடம் மாற்றும் அரசின் திட்டத்திற்குப் பலத்த எதிர்ப்பு

(கொழும்பு)

பொலிசாரை இடம் மாற்றும் அரசாங்கத்தின் திட்டம் தொடர்பாகஅதிகாரிகள் மட்டத்தில் பலத்த எதிர்ப்புக் காணப்படுகிறது. பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்றுவோரில் அதிகாரிகள் உட்பட அனைவரும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இடமாற்றம் செய்யப்பட வேண்டுமென அரசாங்கம் எடுத்த தீர்மானம், பொலிசார் மத்தியில் பெரும் எதிர்ப்பைக் கிளப்பியுள்ளது.

இதுபற்றிசிரேஸ்டபொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடும் போது, பொலிஸ் உத்தியோகத்தர்கள் இத்திட்டத்தால் பொருத்தமான இருப்பிட வசதியை தேடுவது பிள்ளைகளின் பாடசாலை வசதி போன்றவற்றில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் எனக் குறிப்பிட்டார்.

இதுபற்றி ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறுகையில்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவிற்கானவிஜயத்தில் உள்நோக்கமெதுவுமில்லை

## -வெளியுறவு அமைச்சர் கதிர்காமர்

(கொழும்பு)

இந்தியாவுக்கு மேற்கொள்ள இருக்கும் விஜயம் தொடர்பாக விடுதலைப் புலிகள் எதுவித அச்சமும் கொள்ளவேண்டியதில்லை. இவ்வாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், எனது விஜயம் தொடர்பாக எதுவித உள்நோக்கமும் இல்லை இந்தியாவுடன் எந்தவித உடன்பாடோ அல்லது இணக்கப்பாடோ செய்து கொள்ளப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான விடயத்தில் இந்தியாவுடன் எதுவித கடப்பாடும் கொண்டவர்களாக அரசாங்கம் இல்லை. இந்தியாகூட எமது அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சி தொடர்பாக எதுவித அக்கறையையோ ஆர்வத்தையோ காட்டவில்லை எனவும் குறிப்பிட்டார்.

மேலும் இந்தியாவுக்கான எனது விஜயத்தில் எதுவித உள்நோக்கமும் இல்லை என்பதை விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக உணர்ந்து கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவர் பலி; ஒருவரைக் காணவில்லை

(குருநகர்)

கல்முனைக்கு அப்பால் மீன் பிடித்துக்கொண்டு நின்றவர்கள் மீது காஞ்சகாட்டுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ராணுவம் கலிபர் தாக்குதலை நடத்திய அதேவேளை கடற்படை பீரங்கிப் படகில் இருந்தும் நேற்று முன்தினம் அதிகாலை 3-00 மணியளவில் பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதில் ஒரு மீனவர் கொல்லப்பட்டார்.

மற்றொரு மீனவர் கடலில் குதித்து நீந்தி வருகையில் காணாமல் போயுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இரு வள்ளங்களும் அவற்றில் பொருத்தப்பட்டிருந்த வெளி இணைப்பு இயந்திரங்களும் சேதமடைந்தன.

நான்கு மீனவர்கள் மயிரிழையில் தப்பி நீந்திக் கரை வந்தனர்.

பாசையூர், காட்டுவளவு பகுதியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான நீக்கிலாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (ஞானம் வயது 36)

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவையும், இ.தொ.கா. எம்.பி. களையும்

# ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் பட்டியலில் இருந்து நீக்க கோரிக்கை

(கொழும்பு)

இ.தொ.கா. தலைவர் தொண்டமானையும், அவரது கட்சியைச் சேர்ந்த எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்ற வேண்டும். இவ்வாறு ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள்பலர் தலைமைப் பீடத்தை கேட்டுக் கொண்டுள்ளனர்.

கடந்த திங்களன்று ஐ.தே.கவின் பொதுக் குழு கூடிய போது தலைமைப் பீடத்திடம் இக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. இ.தொ.காவின் உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு அவ் இடத்துக்கு ஐ.தே கவின் பட்டியலில் அடுத்துள்ளவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. எனினும் இப்பிரச்சினை பற்றி முடிவெடுக்கும் அதிகாரம் கட்சியின் நீண்ட கால நலன்களின் அடிப்படையில் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் பதுங்கி தாக்குதல் போராளி வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்காப் பொலிசார் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

மேற்படி தாக்குதல் சம்பவம் கடந்த முதலாம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சொறிவில் என்னும் இடத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் லெப்டினன்ட் அன்பரசன் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த லெப்டினன்ட் அன்பரசன் (கிறிஸ்ரிராஜா, அம்பாறை) இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.



லெப். அன்பரசன்

## கோமாரியில் தபால்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிகொண்டு புறப்பட்ட 'கோமாரி' கப்பல் இன்று வந்து சேரும். இக்கப்பலில் நிவாரணப் பொருள்களும் எடுத்துவரப்படுகின்றன. தபால்பொதிகளும் வருமெனஎதிர்பார்க்கப்படுகிறது. பருத்

[6ஆம் பக்கம் பார்க்க]

## சிங்கப்பூரில் பிளம்பயன்

(வடமராட்சி)

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நோயாளிகளை ஏற்றி இறக்கும் 'பிளம்பயன்' கப்பல் திருத்த வேலைக்காக சிங்கப்பூர் சென்றுள்ளதாக அறியமுடிகிறது.

தற்போது கடலில் ஏற்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### பணிவான வேண்டுகோள்

2-12-94 அன்று G. C. E. (O/L) சான்றிதழும் இந்தியாவில் கல்வி பயின்ற உயர் கல்விச் சான்றிதழும் யாழ் போதனா வைத்திய சாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வைஜி மெடிக்கல்ஸ் (Yoga) 520, ஆஸ்பத்திரி வீதியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (10286)

### பசுமாடு காணவில்லை

கறுத்த முகமும் இரு கொம்புகளும் வளைவான மண்ணிறத்தையும் 3½ அடி உயரத்தையுடைய பசுமாடு ஒன்று 21 - 11 - 94 முதல் காணவில்லை கண்டவர்கள் 33 கண்ணாபுரம், கொட்டடி யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். (10293)

### புதிய வகுப்புக்கள்

ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களுக்குரிய புதிய வகுப்புகள் 05-12-94 திங்கள் பி ப 3.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. தமிழ், கணிதம் அம்பிகைபாகன். மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் விதி, யாழ்ப்பாணம். (10297)

### WANTED TYPEWRITER
### உடனடியாகத் தேவை

ஒரு புதிய அல்லது நல்ல நிலையில் உள்ள ஆங்கில PORTABLE) தட்டச்சு இயந்திரம் உடனடியாகத் தேவை. விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும். முருகுப்பிள்ளை மணிவாசகம் (மொழி பெயர்ப்பாளர்) தினேஸ் புத்தகசாலைஇல19, பழைய பஸ் நிலையம் யாழ்ப்பாணம் (10239)

### வெளிவந்து விட்டது

A. L. மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உயர்தர மாணவர் பௌதிகம் வரிசையிலுள்ள சடப்பொருளின் இயல்புகள். கடந்தகால 1994 உட்பட வினாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அ. கருணாகரர். (10269)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து (விண்ணப்பங்கள்) 1994-12.28-ம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. உதவி விரிவுரையாளர் /தற்காலிக உதவி விரிவுரையாளர் - சித்த மருத்துவம்.
2. தற்காலிக செய்முறை காட்டுநர்-சித்த மருத்துவம்.
3. தற்காலிக உதவி விரிவுரையாளர்-வரலாறு

**சம்பள அளவுத்திட்டம்:**

உதவி விரிவுரையாளர்: ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக உதவி விரிவுரையாளர் ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக செய்முறை காட்டுநர்: ரூபா 4,420/- (நிலையானது) மாதமொன்றுக்கு

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென துறைத்தலைவராலும், பீடாதிபதியாலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவர், துணைவேந்தரால், விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவியில் வைக்கப்படுவதுடன் ரூபா 6050-10x250-8,550/- (மாதமொன்றுக்கு) என்ற சம்பள அளவுத்திட்டத்தில் வைக்கப்படுவர்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு)டன் சித்திபெற்றுள்ள பட்டதாரி ஒருவர் உதவி விரிவுரையாளராக (தகுதி காண்) ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**குறிப்பு**

அ) உதவி விரிவுரையாளர்

10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தின் 10%மும், புத்தகப் படியாக, ஒவ்வொரு காலாண்டின்ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் பணமாக செலுத்தப்படும்.

ஆ) 1993மே 12-ம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

தற்காலிக உதவி விரிவுரையாளர் - வரலாறு பதவிக்கு, பெறுபேறுகளுக்காக காத்திருப்போரிடமிருந்தும் 1994 இல் இறுதித் தேர்வுக்குத் தோற்றுவோரிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/-செலுத்திய பின்னர் இப்பல்கலைக் கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/ நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா20/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் 23x10 ச. மீ, அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு:**

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித்தெரு 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994. 11. 30.
(தி-10836)

---

## பாராட்டுகின்றோம்

புனித என்றியரசர் கல்லூரியின் 19 வயது அணியினர் தொடர்ந்து 3 ஆண்டுகளாக (92, 93, 94) யாழ் மாவட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டியில் மேஜர் முரளி வெற்றிக்கிண்ணத்தைப் பெற்று சொந்தமாக்கி கொண்டமைக்காகவும் 17 வயது அணியினர் இவ்வருடம் 1-ம் இடத்தைப் பெற்று மாவீரன் இராஜேந்தர் வெற்றிக்கிண்ணத்தைப்பெற்றுக் கொண்டமைக்கும் எமது உளமார்ந்த பாராட்டுக்களை அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுநர்கள், மாணவர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேராசிரியர் S. பாலசுப்பிரமணியம்
[யாழ். மருத்துவபீடத்தலைவர்]
(10299) பழைய மாணவர் சங்க தலைவர்

---

# வானோசை

### ஒக்ரோபர் நவம்பர்
### வெளிவந்துவிட்டது

அரசியல், அறிவியல், மருத்துவக் கட்டுரைகள் உட்பட பல நகைச்சுவைத் துணுக்குகளோடு மேலும் பல பயனுள்ள அம்சங்களைத் தாங்கி புதுப் பொலிவுடன் வெளிவந்துள்ளது வானோசை. சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**மாணவர்களே!**

பாடசாலை விடுமுறையால் வானோசை உங்கள் கைகளுக்குக் கிடைக்காது என்ற கவலையை விட்டுவிட்டு உங்கள் வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள புத்தக சாலைகளுக்கு விரையுங்கள். அங்கு உங்களுக்காக வானோசை காத்திருக்கும்.

தொடர்புக்கு: இல. 202, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(10301)

---

## யாழ் / உடுவில் தமிழீழ பாடசாலை சேவை

எமது வாகனத்தில் பிரயாணம் செய்யும் பின்வரும் மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமையை வாழ்த்துகின்றேன்.

ஜோன். பொஸ்கோ - அ. நிஷந்தன் 179 புள்ளிகள்

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

சி. சாலினி - 160 புள்ளிகள்

த. புராதனி-152 புள்ளிகள்

தை மாதம் 1995-ம் ஆண்டு தொடக்கம் எமது சேவையில் ஆண்களிற்கும், பெண்களிற்கும் வெவ்வேறாக இரு வாகனங்கள் (தி - 6359, பாகோ

---

## நினைவு கூருகின்றோம்...

## 05.12.1994

1986-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-காத்தான் குடிப் பகுதியில் ஊர்க்காவல் படையினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். அருணன்** (சுந்தரம்பிள்ளை விஜயரத்தினம் - வெல்லாவெளி - மட்டு)

1988-ம் ஆண்டு வவுனிக்குளம், 2-ம் படிவம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**காண்டீபன்** (கேதாரநாதன் இராமநாதன் - ஓதிய மலை - நெடுங்கேணி)

நெல்லியடி - தேவரையாளிப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு பொலிகண்டி முகாமில் வைத்து கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**ஜெயக்குமார் / கந்தன்** (சின்னத்தம்பி ஜெயக்குமார்- அல்வாய் மேற்கு -கரவெட்டி -யாழ்]

1990-ம் ஆண்டு வீமன்காமம் பகுதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**புவன்** (சத்தியநாதன் சிவகுமார் - ஏழாலை மத்தி - யாழ்)

1992-ம் ஆண்டு வவுனியா -பாவற்குளம், 1ம் யூனிட்டில் எதிர்பாராத விதமாக சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். அழகுராஜா - தீபன்ராஜ்** (சந்தனம் செல்வன் - புளியங்குளம் - வவுனியா)

**குமார்** (சிவநாதன் விநாயகம் - முள்ளிக்குளம் - வவுனியா)

இதே தினத்தில் தமிழீழ எல்லைக்குப்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினராலும், இந்தியப்படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10838)

---

## இதய அஞ்சலி

### அமரர் சி. சடாட்சரசண்முகதாஸ்
அவர்கள்

பிரதிப் பிரதம செயலர் - உள்துறை அமைச்சு
மேலதிக செயலர் - கல்வி அமைச்சு
வட-கிழக்கு மாகாணசபை

புங்குடுதீவின் மைந்தனாகத் தோன்றி மண்ணிற்காகவும், நலிவுற்ற மக்களுக்காகவும் பணியாற்றும் வேளை திடீரென மரணமான செய்தி அன்னாரின் அன்பாலும், பண்பாலும், தொண்டாலும் கவரப்பட்ட மக்கள் நெஞ்சங்களையும், எம்மையும் அதிர்ச்சியுறச் செய்துள்ளது. எல்லோர் உள்ளங்களிலும் உள்ள அமரருக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு, அவர்தம் குடும்பத்தினரின் துயரத்திலும் பங்கேற்று அவரின் ஆன்மா சாந்தியடைய

யாழ்ப்பாணம்.

அ) உதவி விரிவுரையாளர் 1994. 11. 30.
ஒருவர்ஆண்டுச்குரூபா (சி-10836)

## ஊக்குவிப்பு கொடுப்பனவு

(தொல்புரம்)

சங்க ஊழியர்களுக்கு அவர்களது ஒரு மாத சம்பளப் பணத்தை ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்க பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க நிர்வாகத்தினர் தீர்மானம் எடுத்துள்ளனர் என தெரிய வருகிறது

தேசிய கூட்டுறவுச் சபையினால் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவாளர் த ர ா த ர பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற்று அதற்கான இறுதிப் பரீட்சையில் சித்தி பெறும் சங்க ஊழியர்களுக்கே இவை கிடைக்கவுள்ளது. (41)

## திருத்த வேலை பூர்த்தி

(தொல்புரம்)

சங்கானை கல்விக்கோட்ட பாடசாலைகள் சிலவற்றில் காணப்பட்ட சிறு திருத்த வேலைகள் இந்த ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பலகாலம் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் காணப்பட்ட பாடசாலைகள் பற்றிய விபரங்களை அறிந்து கொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் அங்குள்ள நான்கு பாடசாலைகளுக்கான சிறு திருத்த வேலைகளை மேற்கொள்ளுமுகமாக கல்வித் திணைக்களத்தினரிடம் இருந்து நிதியுதவி கிடைக்க வழிசெய்ததையடுத்து அராலியை சேர்ந்த முருகமூர்த்தி வித்தியாசாலை, வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை, வடக்கு அ. மி. த. க. பாடசாலை. வட்டு துணைவி அ. மி. த. க. பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளினது சிறு திருத்த வேலைகளும் இவ்வாண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (41)

## வாரிவளவு நல்லியக்கச் சபை - காரைநகர்
## புலமைப்பரிசில் பரீட்சை - 1994

**காரை மாணவர்களை பாராட்டி பரிசில் வழங்கல்**

- ஆண்டு V 1994 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சகல காரை மாணவர்களையும் பாராட்டி பரிசில் வழங்கவுள்ளோம்.
- சித்தியடைந்த காரை பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய காரை மாணவர்கள் தங்கள் பெறுபேறுகளை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி எதிர்வரும் 10-12-94-ற்கு முன்னர் அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

148/10, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம். - செயலர்

1994 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துவோர்;

## திருமாட்டி புடவைக் கடல்

மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(10298)

## டிராக்டர் விற்பனைக்குண்டு

புதிய மசி-பெர்குஸன் (MF 240 Super) டிராக்டர் ஒன்று பெட்டியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

சி. சந்திரன்
C/O என். தவராசா,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (10294)

சேவையில் ஆண்களிற்கும், பெண்களிற்கும் வெவ்வேறாக இரு வாகனங்கள் (தூ1 - 6359, பாகோ கையஸ்) அமர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றேன்.

- மாதக்கட்டணம் - 200/-
- சேர விரும்புவோர் கீழ்வரும் இடத்தைச் சேர்ந்த மாணவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

கொக்குவில் ஆண்டு 8 மாணவர்கள், உடுவில், இணுவில், கோண்டாவில்.


உரிமையாளர்
க. செல்வரட்ணம்
(உடையார்)
டச்சு றோட், உடுவில்

(10289)

## 1 ம் வருட நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
17-11-1957

மறைவு
5-12-1993



## திரு. அன்ரனி சாள்ஸ்

ஆண்டு ஒன்று அறியாது போனதப்பா ஆனாலும் எங்கள் அல்லலோ போகவில்லை. அன்பைச் சொரிந்து அணைத்திட்ட தந்தையே. உம்மை நினைக்கையில் கண்ணீர் பெருகுதையா.

இவரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் உதவிகள் பல புரிந்த நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

15/8, மத்தியூஸ் லேன், யாழ்ப்பாணம். -குடும்பத்தினர். (10300)

கையாக்குவதோடு, அவர்தம் குடும்பத்தினரின் துயரத்திலும் பங்கேற்று அவரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

கல்வி வளர்ச்சிக் கழகம்
புங்குடுதீவு

(10292)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
18 - 11 - 1950

விண்ணில்:
05 - 12 - 1993

## திருமதி இயோமர் றொசாறி

அகத்தாளே! அன்னையே! தங்கையே! அன்ரியே
ஆண்டொன்று இன்று வந்து - நீர்
முகத்தாலே உளங்காட்டும் முறுவலை நினைவூட்டி
மூட்டுது கவலைத் தீயை - வீண்
பகட்டதாய் நாமிதைச் சொல்வதாய் நினைக்காதே
பாசத்தின் பிம்பமம்மா - இவ்
இகத்திலே இருந்தான்ம இளைப்பாற்றி உமக்கீய
இறைவனை வேண்டுகின்றோம் - நாம்

பாக்கிய மஹால்
பாஷையூர்.

கணவர், பிள்ளைகள்,
சகோதரர்

(10284)

# மாலைதீவு பெண் உளவாளிகள் மூலம் பாக். இற்கு, இந்திய இராணுவ தகவல்கள்

இந்திய விண்வெளியில் ஒற்றுசதி என்பது பற்றி தினேஷ்மேனன் எழுதிய செய்தி ஆய்வுரையை இங்கு தருகின்றோம்.

இந்தியா தனது விண்வெளி ஆய்வுகலங்கள் மூலம் அண்மைக்காலமாக துருவப்பகுதி ஆய்வுகளை சிறப்புறமேற்கொண்டு வந்தது. தற்போது இம்முயற்சி வெற்றிபெறக் கூடாது என்பதற்காக பல நாடுகள் முயற்சிகளை செய்கின்றன. ஆனாலும் திரவ எரிபொருளை கொண்ட ஏவுகலத்தை செலுத்தி இந்தியா தன் திறமையை நிருபித்துள்ளது.

அடுத்த கட்டமான கரையோஜெனிக் என்ஜின் தொழில் நுட்பத்தை செயற்படுத்தவும் தயாராகி விட்டது. இந்நிகழ்வு நடைபெற்ற சில நாட்களினுள்ளேயே ஒற்றர்களின் சதித்திட்டம் ஒன்றும் அம்பலமாகியுள்ளது. இந்திய மத்திய அரசின் புலனாய்வுப் பிரிவு, துப்பறியும் பிரிவு கேரள பொலிசின் ஐவர் கொண்ட குழு என்பவற்றின் உதவியோடு சதியில் ஈடுபட்ட ஐவர்கைதாகியுள்ளனர். இதில் ஒருவர் திருவனந்தபுரத்திற்கு அருகேயுள்ள வாலிமலையில் இயங்கும் திரவ எரிபொருள் ஆய்வக துணை இயக்குனர் ஆவார். இந்த சதி பற்றிய விபரம் மாலைதீவை சேர்ந்த உளவுப்படை பெண் மரியம் வசியா என்பவர் கைதான போது வெளிப்பட்டது.

இப்பெண் தனது விசா காலம் முடிவடைந்த பின்பும் கூட இந்தியாவிலிருந்தமைக்காக கைதானார். அவரின் விடுதி அறை சோதிக்கப்பட்டபோது இரகசியங்கள் தொடர்பான பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

அவரோடு சேர்ந்து மாலைதீவைச் சேர்ந்த மற்றோர் நபரும் பெங்களூரைச் சேர்ந்த ரஷ்ய விண்வெளி துறையின் முகவர் ஒருவரும் கைதாகினர்.

மேலும் விசாரணையின் விளைவாக இந்திய விண்வெளி பொறியியலாளர் ஒருவரும் கைதானார். கைதான அனைவர் மீதும் இந்திய அரசின் இரகசிய பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பலபிரிவுகளில் வழக்குகள் பதிவாகியுள்ளன. இச்சதியில் உயர்பொலிஸ் அதிகாரி ஒருவரும் பாகிஸ்தான் உளவு ஸ்தாபன தொடர்பும் இருப்பது அறியப்பட்டுள்ளது. சதிக்கூட்டத்தின் தலைவர் மாலைதீவில் தங்கியிருப்பதாக தெரிகிறது.

கைதான வாசியா ஹசன் என்ற பெண்ணை பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ. எஸ். ஐ பயன்படுத்தியுள்ளது. மரியம்வசியா என்ற பெண்ணை விஞ்ஞானிகளுக்கு அறிமுகம் செய்து அவர்களை தமது வலையில் விழச்செய்துள்ளனர். விஞ்ஞானிகளுக்கு மது, பெண்கள், பணம் என்பவற்றை வழங்கி தமது காரியத்தை சாதித்து வந்துள்ளனர்.

துருவ ஏவுகணை திட்டத்திற்கும், கரையோஜெனிக் ஏவுகணை திட்டத்திற்கும் திரவ எரிபொருள் ஆய்வகம் மிகமுக்கிய பங்கை ஆற்ற வல்ல இடமாகும். பொலிசாரின் பூர்வாங்க தகவலின் படி கைதான இருபெண்களும் திரவ எரிபொருள் ஆய்வக விஞ்ஞானிகள் தமக்கு இராணுவ இரகசியங்களை தந்ததாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்திய அரசின் இரகசிய புலனாய்வுத்துறை பாகிஸ்தான் உளவு அமைப்பு தென் இந்தியாவில் மேற்கொண்ட மிகப்பெரிய ஒற்று நடவடிக்கை இதுவென நம்புகின்றது.

இது தொடர்பாக பரந்தளவில் புலன்விசாரணையை மேற்கொள்ளுமாறு கேரள அரசு இந்திய மத்திய அரசைக் கோரியுள்ளது. பாகிஸ்தான் உளவு அமைப்பு இச்சதியில் சம்பந்தப்பட்டிருப்பது முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும் கரையோஜெனிக் தொழில் நுட்பத்தில் இந்தியா தற்சார்பு நிலையை எட்டும் நிலையில் இந்த ஒற்றுசதி வெளிப்பட்டிருப்பதும் பரந்தளவில் புலன் விசாரணையை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. இதுவரை எந்தளவிற்கு தகவல்கள் வெளிச்சென்றுள்ளன என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

பாதுகாப்பு இரகசியங்கள் நிறைந்த இடங்களருகே வெளிநாட்டவரை எந்தளவுக்கு அனுமதிக்கலாம் என்பது பற்றியும் வேறு ஏதாவது அமைப்புகளிலும் இத்தகைய ஊடுருவல் நடந்துள்ளதா என்பது நோக்கப்பட வேண்டியவை. எனவே விண்வெளி ஆய்வில் இந்தியா தற்சார்பு நோக்கி செல்லும் நிலையில் எந்தத்தடையும் நிகழா வண்ணம் உறுதி நடவடிக்கை எடுப்பது தேவையாகின்றது.

## ஆசிரிய சங்க கோரிக்கை மானியகுழுவால் நிராகரிப்பு

(கொழும்பு)

பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு 10 சதவீத சம்பள உயர்வு வழங்குமாறு, அகில இலங்கை பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் விடுத்த கோரிக்கையை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு நிராகரித்துவிட்டது.

இதேவேளை எதிர்வரும் 14-ம் திகதி சம்பள உயர்வு வழங்கப்படாமையை ஆட்சேபித்து அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள இருப்பதாக அகில இலங்கை பல்கலைக் கழக ஆசிரியர் சம்மேளனம் அறிவித்துள்ளது.

## பெண் பொலிஸாரிடம் நகை அபகரிப்பு

(கொழும்பு)

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவியை வகிக்கும் பெண் ஒருவர் பயமுறுத்தப்பட்டு அவரது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் களுத்துறை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரான இப்பெண் தமது கடமையை முடித்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிந்த போது இச் சம்பவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## கண்டெடுப்பு

கைதடிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் கைதடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து சிறு தொலைவில், ஒரு தொகுதி திறப்புக் கோர்வையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் கூறி ஈழநாதம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## தேசிய சேமிப்பு வங்கியின் வட்டி விகிதம் குறைப்பு

(கொழும்பு)

தேசிய சேமிப்பு வங்கியும் பணவைப்புகள் மீதான தனது வட்டி விகிதத்தை இம் மாதம் முதல் குறைந்துள்ளது. இதன் படி இது வரை காலமும் ஒரு வருட நிலையான வைப்பிற்கு வழங்கப்பட்டு வந்த 16 சதவீத வட்டி இனி 14 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இது வரை இருவருட நிலையான வைப்பிற்கும் பணம் ஏற்கப்பட்டு வந்தது. இந் நடைமுறைநீக்கப்பட்டுள்ளது மாதாந்த வட்டிக் கொடுப்பனவு அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த 15. 3 சதவீத வட்டி 13. 2 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. சேமிப்பு வங்கி கணக்குகள் மீதான வட்டியும் ஜனவரி முதல் 14 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

## அக்கரைப்பற்று பகுதியில் படையினர் தீவிர தேடுதல்

(கொழும்பு)

பாதுகாப்பு படையினர் அக்கரைப்பற்று பகுதியில் தமது தேடுதல்களை தீவிரப் படுத்தியுள்ளனர். மழையையும் பொருட்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் இச்சுற்றிவளைப்பு தேடுதல்களில் தமிழ் மக்கள் முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். வீதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன,

அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புறங்களிலும், காட்டுப் பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன. படையினரின் இந் நடவடிக்கைகளின் காரணமாக விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## ஐ. தே. க. பாராளு- உறுப்பினர் நடத்தைகளைப் பதிவுசெய்ய ஆவணக்கோவைகள் திறப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்திலுள்ள ஐ. தே. கவின் உறுப்பினர்களின் நடத்தைகளைப் பதிவு செய்யும் முகமாக கட்சித் தலைமைப்பீடம் ஒவ்வொருவருக்குமென தனித்தனி ஆவணக் கோவையொன்று திறக்கப்படவுள்ளது. இது தொடர்பான பணிப்புரைகளை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் தற்போது அங்கத்துவம் பெற்றுள்ள 85 ஐ. தே. க உறுப்பினர்களதும் நடத்தைகள், சாதனைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக இவ் ஆவணத்தில் பதிவு செய்யப்படுமெனவும் எதிர்காலத்தில் நியமனங்கள் வழங்கப்படும்போது இது கவனத்தில் கொள்ளப்படுமெனவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

## சீனித் தட்டுப்பாடு

யாழ். மாவட்டத்தில் சீனிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

வெளிச்சந்தையில் ஒரு கிலோ கிராம் சீனி அறுபது ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதைவிட வேறு அத்தியாவசியப் பொருள்களிற்கும்யாழ். குடாநாட்டில் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

யாழ். குடா நாட்டிற்கு விதை உருளைக் கிழங்கை ஏற்றி வந்த குமண கப்பலில் அத்தியாவசியப் பொருள்கள் ஏற்றிவரப்படவில்லைஎனவும் தெரிவிக்கப்படுகிறது (இ,நி)

## பணவீக்கம் 15 சதவீதமாக உயரலாம் எனக் கணிப்பு

(கொழும்பு)

மா, பாண் போன்ற பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதன் காரணமாக வரவு செலவுத் திட்டத்தில் 4.5 பில்லியன் ரூபாவை மேலதிகமாக செலவிட வேண்டி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. சிறிலங்காவின் நிதி ஆய்வாளர்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளனர். நாட்டில் பணவீக்கம் 12 வீதம் வரை அதிகரித்து இருப்பதாகவும் இது15 வீதம் வரை உயரலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் இவ் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

## ஆயுதங்களிருந்த வீட்டில் இருந்த பெண்ணும் கைது

(கொழும்பு)

விசாரணைக்காக கைதுசெய்

## கொமாண்டோ சீருடையில் வாகனம் திருடிய பிக்கு

புத்தபிக்கு ஒருவர் இராணுவ கொமாண்டோ சீருடையில் வாகனங்களை கொள்ளையடித்து வந்த சம்பவங்

புத்தபிக்கு தலைமை தாங்கியதாகவும் சட்டத்தரணிகள், டாக்டர்கள் என தங்களை கூறிக்கொண்டு வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியும் இவர்கள் கொள்ளைகளை நடத்தியதாகவும் தெரியவந்துள்ளது.

## ஜே. வி. பியை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சி

(கொழும்பு)

ஜே. வி. பி. கட்சியை மீண்டும்கட்டியெழுப்புவது தொடர்பாக அதன் சிதறி நிற்கும் கட்சி உறுப்பினர்களை ஒன்றிணைத்து கட்சியின் தேசிய மகா நாட்டை நடத்த தற்போது முயற்சிகள் மேற்கொ

கட்டியெழுப்பப்படும்என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெற்றுக்கொள்ளவும்

புங்குடுதீவு 9-ம் வட்டாரத்தைச் சேர்ந்த மார்க்கண்டு ஸ்ரீரூபன், அன்னலிங்கம் சசிகரன் ஆகியோருடைய

(கொழும்பு)

சட்டான பகுதியில் கைப்பற்றப்பட்ட நவீனரக துப்பாக்கி மற்றும் துப்பாக்கிரவைகள் காணப்பட்ட வீட்டிலிருந்த பெண்ணொருவர் சிறிலங்கா பொலிசாரினால் விசாரணைக்காக கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக நான்கு முக்கிய புள்ளிகள் தேடப்பட்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ள்ளையடித்து வந்த சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

கம்பகா பகுதியில் ஆறு பேர்கொண்ட இக் கொள்ளைக் கோஷ்டிக்கு மேற்படி

களை கூறிக்கொண்டு வாக

தெரியவந்துள்ளது.

போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதன் நடவடிக்கை செயலாளர் குணசேரனதசில்வா வருகேடு தெரிவித்துள்ளார்.

தமது கட்சி உறுப்பினர்கள் எதிர்வரும் தேர்தலில் மக்கள் முன் செல்ல கூடிய வகையில் இக் கட்சி மீண்டும்

சசிதரன் ஆகியோருடைய அடையாள அட்டைகள் யாழ். ஜும்மா பள்ளிவாசல் தெருவில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் ஆதாரம் காட்டி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

## நக்ஸலைட்டுக்களுடன் புலிகளுக்கு உறவாம்

(கொழும்பு)

ஆந்திரப்பிரதேசத்திலுள்ள மாவோ சார்பு கெரில்லாக்களுக்கு விடுதலைப் புலிகள் உதவி வருவதாகவும், இந்திய பாதுகாப்பு படையினருக்கு எதிராக இவர்கள் மேற்கொள்ளும் கண்ணிவெடித் தாக்குதல்கள் இதைக் காட்டுவதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், சர்வதேச புரட்சி அமைப்புகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கல்வி அலுவலகத்தில் தமிழ் பிரிவுக்கு கோரிக்கை

(கொழும்பு)

மேல் மாகாண கல்வி அலுவலகத்தில் சகல வசதிகளுடனும் கூடிய தமிழ்ப்பிரிவொன்று அமைக்கப்பட வேண்டும் என முற்போக்கு ஆசிரியர் முன்னணி மேல் மாகாண முதலமைச்சரைக் கேட்டுள்ளது. தமது வேலை தொடர்பான பிரச்சினைகளை எதிர் நோக்கும் ஆசிரியர்கள் மேல்மாகாண கல்வி அமைச்சு அலுவலக தமிழ் பிரிவுடன் நேரடியாக தொடர்பு கொண்டு தம்முடைய பிரச்சினைகளுக்கு பரிகாரங் காணக் கூடிய வகையில் இது அமைய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆசிரியர் முன்னணி முதலமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தமிழ் மொழிப் பாடசாலைகளினதும் தமிழ் மொழி ஆசிரியர்களுடனுமான தொடர்புகள் அனைத்தும் தமிழ் மொழியிலேயே பேணப்பட வேண்டும் தமிழ் மொழிப்பாடசாலைகளுக்கான அனைத்துச் சுற்றறிக்கைகளும் தமிழ்மொழியிலேயே இருத்தல் வேண்டும். மேற்குமாகாண கல்வி அலுவலகத்திலும் மற்றும் மாவட்ட அலுவலகங்களிலும் தமிழ்மொழியில் கருமமாற்றக் கூடிய அதிகாரிகளையும் எழுதுவினைஞர்களையும் நியமிக்க வேண்டும்,

கல்வி அதிகாரிகளுக்கு மேல் மாகாணத்திலுள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கும் இடையில் பாரிய தொடர்பு இடைவெளியிருப்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். இந்த இடைவெளி விரைந்து அகற்றப்பட வேண்டும் எனவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

## மீனவர் விடுதலை

(கொழும்பு)

பூநகரி கடற்பரப்பில் படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவர் வடபகுதியிலுள்ள பல இராணுவ முகாம்களில் பல காலம் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் வவுனியாவில் வைத்து பொலிஸாரால் விடுதலை செய்யப்பட்டு உள்ளார். வேலணை வாசியான இவர் இடம் பெயர்ந்து இணுவில் பகுதியில் வசித்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. நாகராசா (56வயது) என்னும் மீனவரே இவ்வாறு விடுவிக்கப்பட்டவராவார்.

## இலவச கொப்பிகள்

ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் இயங்கும் யா/ புங்குடுதீவு சித்திவிநாயகர் மகாவித்தியாலயத்திலும் கமலாம்பிகை வித்தியாலயத்திலும் ஆண்டு ஒன்று ஆண்டு ஆறில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர் இதில் சேரும் மாணவர்களுக்கு எழுதுகருவிகள் கொப்பிகள் என்பன பழையமாணவர்சங்கத்தினரால் இலவசமாக வழங்கப்படுமென அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பு பயணம்

வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் மாதாந்த அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்றுள்ளார். (இ)

## கிராமசேவகர் வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

பாணந்துறை கிராமசேவகரின் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் துப்பாக்கி, துப்பாக்கிரவைகள் என்பன பொலிஸ் தலைமையக நெடுஞ்சாலைகள் ரோந்து பொலிஸ் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரும் கைதாகியுள்ளார்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் ஜே. வி. பியினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக அக் கிராமசேவகர்பொலிசாருக்கு தெரிவித்துள்ளார்.

## யாழ். மாவட்ட கணனிகள் ஈ.பி.டி.பியால்நெடுந்தீவுக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழில் பயிலுனர் சபையினால் யாழ் மாவட்டத்திற்கு கணனி பயிற்சிக்கு ஒதுக்கப்பட்ட கோட்டா முழுவதும் ஈ. பி. டி. பியினரால் நெடுந்தீவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதற்கான கணனிகளும் நெடுந்தீவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழில் பயிலுனர் சபையினால் நாடு பூராகவும் நடாத்தப்பட்டு வரும் கணனி பயிற்சி நெறிக்கு ஒவ்வொரு மாவட்டத்தின் சனத்தொகையின் அடிப்படையில் கோட்டா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட கோட்டா முழுவதும் நெடுந்தீவிற்கு ஈ. பி. டி. பியினரால் மாற்றப்பட்டுள்ளது.

இதற்கான கணனிகளும் அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிக்கான மாணவர்களை நெடுந்தீவில் தங்கியுள்ள ஈ. பி. டி. பியினர் தெரிவு செய்துள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (இ, பா, நி)

## இருவர் கைது

(திருநெல்வேலி)

கடந்த வெள்ளி ஆனைக் கோட்டையில் நடந்த வியாபாரியின்மர்மமரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவர் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறையினர் இம்மரணம் தொடர்பாக தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (27)

## புலிகளின் உளவாளி என்று கூறி இராணுவஅதிகாரிஎன்னைதாக்கினார்

### விடுவிக்கப்பட்ட விறகு வியாபாரி தகவல்

(வடமராட்சி)

எனது கண்களையும் கைகளையும் கட்டி வைத்து இராணுவ அதிகாரி 'நீ புலி அல்லது புலிக்கு உளவு பார்ப்பவன்' என்று கூறி பலமாக தாக்கினார்.

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட சின்னத்தம்பி - கனகசிங்கம் பருத்தித்துறை இறங்குதுறையில் வைத்து எமது வடமராட்சி செய்தியாளருக்கு முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடும் போது, நான் ஒரு விறகு வியாபாரி. நானும்வேறு சிலருமாக கட்டுவன் பகுதிக்கு விறகு தேடச் சென்றோம். சம்பவ தினம் அங்கு மறைந்திருந்த இராணுவப் படையினர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது என்னுடன் வந்தவர்கள் ஒருவாறு ஓடி விட்டனர். என்னால் ஓட முடியவில்லை. அதே சமயம் இராணுவம் என்னைக் கைது செய்தது.

இராணுவம் என்னைக் கைது செய்ததும் எனது சேட்டைக் கழற்றி எனது கண்களையும், கைகளையும் கட்டியது. பின்னர் டிரக் ஒன்றில் ஏற்றிச் சென்றது. கட்டுவனுக்கு சென்றதும் விசாரணை நடை பெற்றது. அதனையடுத்து பலாலியில் இருந்து உயர் இராணுவ அதிகாரி ஒருவர் வந்தார். அவர் என்னை விசாரணை செய்தார். தமிழிலேயே பேசினார்.

என்னை விசாரணை செய்த அந்த உயர் அதிகாரி எனது இருப்பிடத்தை விசாரித்தார். நான் மல்லாகத்தில் தற்போது இருப்பதாகக் கூறினேன். அதற்கு அந்த அதிகாரி யாழ்ப்பாணத்தில் இருப்பவர்கள் அனைவரும் புலிகள் தான். நீயும் புலியாக இருக்கலாம் அல்லது புலியின் ஆதரவாளனாக இருக்கலாம் நீ புலிக்கு விறகு எடுக்க வந்திருக்கிறாய் என்று கூறி என்னை பலமாகத் தாக்கினார்.

பின்னர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் என்னை ஒப்படைத்தனர். விடுவிக்கும் வரை நான் அங்கேயே தங்கியிருந்தேன் என்றார். (யோ)

## உதவிப்பணம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி பிரதம தபாலகத்தில் மாதாந்தம் பொதுசன உதவிப் பணம் பெறுவோர் 1994ம் ஆண்டு மார்கழி மாதத்திற்குஉரிய உதவிப் பணத்தினை தபாலக அலுவலக நேரத்தில் எதிர்வரும் 14-ம் திகதிக்கு முன்னர்பெறுமாறு தபாலக அதிபர் கேட்டுள்ளார் (86)

# ஊரக மட்டத்தில் மக்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் சனசமூக நிலைய நடவடிக்கைகள் மாற்றப்படும்

எமது தமிழீழ பிரதேசத்தில் அடிமட்ட ஊரக மக்கள் மத்தியில் பரீட்சியத்தமான பொதுசன பிரதிநிதித்துவமுடைய அமைப்புக்களில் மிகப் பிரதானமானவை சனசமூக நிலையங்களேயாகும். இந்நிலையங்கள் ஸ்தாபிக்கப்படுவதன் நோக்கம் வரவேற்கத்தக்க சிறப்புத் தன்மைகளைக் கொண்டிருந்த போதிலும் இந்நிலையங்கள் அனைத்தும் தமது நோக்கங்களில் வெற்றி கண்டுள்ளனவா என்பது கேள்விக்குரிய விடயமாகவே அமைகின்றது.

ஊரக மட்டங்களில் சமத்துவம் நிலவத்தக்க வகையில் ஆற்றல் மிக்க ஒற்றுமையான சமூகத்தைக் கட்டி எழுப்பி சமூக மேம்பாட்டிற்காக உழைக்க வேண்டிய இச்சன சமூக நிலையங்களில் பெரும்பாலானவை பெயரளவில் வெறும் கட்டடங்களாகவே நிலைத்து நிற்கின்றன.

கடந்த காலங்களில்,

01. அரசியல் வாதிகளின் அரசியல் நோக்கம் கருதிய தலையீடுகள் அல்லது செயற்பாடுகள்.
02. சனசமூக நிலையங்களின் வழிகாட்டும் அல்லது நெறிப்படுத்தும் திணைக்களம் சார்ந்தவர்களின் பொறுப்பற்ற தன்மைகள் அல்லதுசமூகம் மத்தியில் சரியான முன்னெடுத்தல்களை மேற்கொள்வதற்கான பின்னடிப்புக்கள் அல்லது சுயநலம் காரணமாக விடயத்திற்கு திருத்தமான முடிவைக் கொடுக்காது சமத்துவத்தை ஒற்றுமையை சமூகம் மத்தியில் வளர்த்து எடுக்கத்தவறியமை,

போன்ற காரணங்களால் சனசமூக நிலையங்கள் சாதியடிப்படையிலும் சமயரீதியாகவும், பிரிவினைகோரும் குழுக்களுக்கொன்றாகவும்; சமூகத்தை பிளவுபடுத்தும் அமைப்புக்களாகவே உருவெடுத்தன. கிராமத்தில் சந்திக்குச்சந்தி சனசமூக நிலையங்கள் பெருகினவேயல்லாது ஆரோக்கியமான சமூகத்தை வளர்த்தெடுப்பதில் எதிர்பார்க்கப்பட்ட பலன்களை எட்ட முடியவில்லை.

மேலும் எமது பிரதேசங்களில் உள்ளூராட்சித் திணைக்களம் பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சிமன்றுகள், மாகாணசபை ஆகியவற்றிடையேயுள்ள குழப்பமான தொடர்பு நடைமுறைகளும் சனசமூக நிலையங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் வெகுவாகப் பாதித்துள்ளன.

இதனால் சுயாதீனமாக இயங்கக் கூடிய வலுவைக் கொண்ட வளர்ச்சியடைந்த நிதிவளம் நிறைந்த ஆற்றல் நிறைந்த சமூகத்தின் மத்தியில் காணப்படும் நிலையங்களே தொடர்ந்து இயங்கு நிலையிலும் கிராமிய மட்டத்தில் வலுவற்ற சமூகம் மத்தியில் உள்ள சனசமூக நிலையங்கள் அநாதரவான நிலையில் மக்களிடமிருந்து அந்நியப்பட்ட நிலையில் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் இச்சனசமூக நிலையங்களை இவற்றின் நிர்வாகப்பரப்புகளுள் தனிமனித சமூகம் தொடர்பான கல்வி, சுகாதாரம், கலை கலாசாரம் சம்பந்தப்பட்ட மேம்பாட்டிற்கும் பொருளாதார சமூக அபிவிருத்திகளிற்கும் சமூகத்தில் சுற்றாடலில் நிகழும் சகலவிதமான சீர்கேடுகளையும்களைந்து சமத்துவம் சகல விடயங்களிலும் பேணவல்ல ஆரோக்கியமான, சுதந்திர வேட்கையுள்ள ஆற்றல் மிக்க ஒற்றுமையான சமூகத்தை கட்டி எழுப்பும் நோக்கத்துடனேயே அதன் முதற்கட்டமாக தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே உள்ளூராட்சித் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்ட பதிவு செய்து கொள்ளாத அமைப்புக்கள் எவையும் தொடர்ந்து சமூகத்தின் மத்தியில் செயற்பட வேண்டுமாயின் தமிழீழ நிர்வாக சேவையில் தம்மைப் பதிவு செய்து பெற்ற பதிவு இலக்கத்தையும் பதிவுச் சான்றிதழ்களையும் பெற்றிருக்க வேண்டும்.

பதிவிற்கான விண்ணப்பத்தை மேற் கொள்பவர் தன்னை குறித்த ச. ச. நிலையத்தின் பிரநிதியென்பதை உறுதிப்படுத்தி தமிழீழ நிர்வாக சேவையில் பதிவகப் பகுதியினால் இலவசமாக வழங்கப்படும் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்திய பின் ஒப்படைத்தல் வேண்டும் பதிவிற்காக படிவத்தின் மூலம் கோரப்படும் விடயங்கள் முழுமையான முறையில் தரப்படாத நிலை காணப்படுமாயின் கிராமிய மட்டத்தில் காணப்படும் குடும்பங்களின் ஒவ்வொருவர் என்ற வகையில் 51% எண்ணிக்கையிலும்அதிகமானோரின் விருப்பு இருக்கும்போது மட்டும் பதிவு செய்யும் அனுமதி வழங்கப்படும்.

## பெயர் மாற்றம்

இதுவரை சனசமூக நிலையங்கள் என அழைக்கப்பட்டு வந்த இப்பொதுசன பிரதிநிதித்துவ அமைப்புகள் எதிர்காலங்களில் சனசமூக நலநோம்பு மூலவள நிலையங்கள் என பெயர் பெறும். உதாரணமாக ''பாரதி சனசமூக நிலையம்,' என்பது ''பாரதி சனசமூக நலநோம்பு மூலவள நிலையம்'' என பெயர் மாற்றம் பெறும். ''பாரதி என்பதை மாற்றம் செய்வது குறித்து சன. சமூக நலநோம்பு மூலவள நிலையத்தின் பொதுச் சபையைச் சார்ந்தது. எவ்வாறாயினும் முகப்புப் பெயர் தூய தமிழ்ப் பெயராக இருப்பது விரும்பத் தக்கதாகும்.

> சனசமூக நிலையங்களை தமிழீழ நிர்வாக சேவையில் பதிவு செய்து கொள்வதன் நோக்கம் குறித்து தமிழீழ நிர்வாக சேவைவிடுத்த செய்திக் குறிப்பு இங்கே தரப்படுகின்றது.

## யாப்பு விதிகள்

சனசமூக நலநோம்பு மூலவள நிலையங்களை தமிழீழ நிர்வாக சேவையில் தம்மைப் பதிவு செய்து பதிவு இலக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்வதோடு தமிழீழ நிர்வாக சேவையினால் வழங்கப்படும் யாப்பு விதிகளையும் பின்னொற்றியதான நடைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டியது அவசியமானது. யாப்பு விதிகள் அடங்கிய அச்சிடப்பட்ட கையேட்டினை அச் சேற்றற் கூலியை மட்டும் வழங்குவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழீழ நிர்வாக சேவையின் சனசமூக நலநோம்பு மூலவள நிலையங்கள்தொடர்பான யாப்பு ச. ச. ந. நோம்பு நிலையங்களில் குறித்த ஒரு சிலர் மட்டும் பங்கு கொள்ளும் நிலையை மாற்றி ஊரக மட்டத்தில் மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்கத்தக்க வழிவகை செய்வதோடு

1. சமூகத்தில் நிலவும் சீர்கேடுகளைக் களைதல்.
2. அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல்.
3. சமூகத்தில் ஊக்குவிப்பற்ற நிலையில் இலைமறைகாய்களாக காணப்படக் கூடிய சிறப்பம்சங்களை வெளிக்கொண்டு வருதல்.
4 ஊரகத்தின் பிரதிநிதித்துவத் தன்மைக்கு வழி வகுத்தல் போன்ற சிறந்த ஏற்பாடுகளைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## முகாமைத்துவத்தோடு தொடர்புடைய ஆளுகைக் குழுக்கள்

மக்களினால் ஊரகமட்டங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பொறுப்பிலேயே பிரச்சினைகளையும், சமூக மேம்பாட்டுத் திட்டங்களையும் வழங்கி தீர்வுகளை அமுலாக்கும் முகமாகவே ஆளுகைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக் குழுக்கள்,

1. நிலைய செயற்குழு
2. வட்டக்குழு
3. கோட்டக்குழு
4. மாவட்டக்குழு

என வகைப்படுத்தப்படினும்,

செயற்குழு தவிர்ந்த ஏனைய குழுக்கள் குறித்த பொதுசன பிரதிநிதித்துவ அமைப்பின் நிர்வாகப்பரப்பின் உள்ளாகவும் வெளியாகவும் செயற்படக் கூடிய வலுவைக் கொண்டிருக்கும்.

நிலைய செயற்குழு பொதுச் சபையினரிடமிருந்து உருப் பெறும். இக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 11 இற்கு குறையாமலும் 21இற்குமேற்படாமலும் ஒற்றையெண் எண்ணிக்கையில் அமைதல் வேண்டும்.

வட்டக்குழு தற்போதைய பிரதேச செயலர் பிரிவு/எதிர்காலத்தில் தமிழீழ நிர்வாக சேவை உருவாக்கும் அதையொத்த பிரிவு வாரியாக செயற்குழுவின் அடுத்த மட்டத்தில் அமையும் ஒவ்வொரு நிலைய செயற்குழுவின் தலைவருடன் செயலாளர் அல்லது பொருளாளர் உள்ளிட்ட இருவர் பதவி வழியாக வட்டக்குழுவின் உறுப்பினர்களாக அமைவர்.

கோட்ட மட்டங்களில் இயங்கும் குழுக்களே கோட்டக் குழுக்கள் எனப்படும். வட்டக்குழுக்களின் நிர்வாகங்கள் ஒன்று சேர்ந்து கோட்டக்குழுவை தெரிவு செய்யும். சகல கோட்டக் குழுக்களினதும் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மாவட்டக் குழுவை தெரிவு செய்வர். இக்குழுக்களின் உருவாக்கத்துடன் எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக எல்லைப் பரப்புவாரியாக அமைக்கப்பட்ட ''சமாசங்கள்'' செயலிழக்கப்படுகின்றன.

ஃ ஆளுகைக்குழுக்கள் அனைத்தும் விடுதலைப் புலிகள் கிராமிய /வட்ட/கோட்ட/ மாவட்ட மட்டத்தில் உள்ள அரசியற்துறைபொறுப்பாளர்கள் அல்லது தமிழீழ நிர்வாக சேவைஎடுத்தியம்பும் ஆளொருவரினதும் முன் நிலையில் அமைக்கப்படும். மேலும் குறித்தநிர்வாக எல்லைப்பரப்பினுள் கடமைாற்றும் குறித்த பொது அமைப்புக்கள் தொடர்பான அரச அலுவலகர்களும் இக்குழுக்கள் அமைக்கப்படும் நிகழ்வுகளில் கலந்து கொள்வர்

ஃ நிலையம் தனது வருடாந்த செயற்குழுவினை அமைத்த பிற்பாடு வட்டக் குழுக்கள், கோட்டக்குழுக்கள், மாவட்டக்குழுக்கள், அனைத்தும் மாசி 05 இற்கு முன்பாக உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஃ இக்குழுக்களில் நிலைய செயற்குழு தவிர ஏனையவையான வட்டக்குழு, கோட்டக்குழு, மாவட்டக் குழுக்கள் அமைக்கப்படுவதற்கான கால நேர அமைவிட விபரங்கள் கொண்ட அமைப்பு அறிவித்தல்கள் பத்திரிகை வாயிலாக / நேரடியான கடிதம் மூலம் தமிழீழ நிர்வாக சேவை அல்லது வட்ட/ கோட்ட /மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர்களினால் விளம்பரப்படுத்தப்படும் அல்லது அறிவிக்கப்படும்.

## ஆளுகைக்குழுக்களின் கடமைகள்

ஃ செயற்குழு /நிலைய செயற்குழுக் கூட்டங்கள்குறைந்தது மாதம் ஒரு தடவையும் பொதுக்கூட்டங்கள் குறைந்தது நான்கு மாதங்களிற்கு ஒரு தடவையாவது நடத்தப்படுதல் வேண்டும்.

ஃ 1995 - ம் ஆண்டிற்குரிய நிர்வாக தெரிவுசம்பந்தமான கூட்ட அறிக்கை முன் கூட்டியே தமிழீழ நிர்வாக சேவைக்குஅனுப்பப்படல் வேண்டும்.

ஃ நிர்வாக எல்லைப் பரப்பினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய மிக அவசியமான வேலைத்திட்டங்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்தி 02-ம்மாத முடிவிற்கு முன்பாக வட்டக்குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஃ பொதுச்சபைக் கூட்டங்களின் கூட்டறிக்கைகளின் பிரதிகள், கணக்கு அறிக்கைகள் தமிழீழ நிர்வாக சேவைக்கு கிரமமான முறையில் அனுப்பப்படல் வேண்டும்.

ஃ புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படும் போது முன்னோடியாக நிகழ்ச்சி நிரலுடன் முடிவடைந்த காலத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைத்திட்டங்கள்' கணக்கறிக்கைகளுடன் இணைக்கப்பட்டு இவ்வறிவித்தல் விபரங்களுடன் தமிழீழ நிர்வாக சேவைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

ஃ பொதுமக்களிடம் அவர்களின் தனிப்பட்டபொருளாதார நிலைமைகளிற்கு அமைவாக உறுப்பினர் கட்டணம்/ சந்தாக் கட்டணம் பொதுசபையின் அங்கீகாரத்துடன் அறவிடப்படலாம். மாதாந்தம் 10 ரூபாவிற்கு குறையாத 50ரூபாவிற்குமேற்படாத தொகையை அறவிடலாம். ஆனால் அறவிடப்படும் பணம் தொடர்பான விபரம் தமிழீழ நிர்வாக சேவைக்கு அறியத்தருதல் அவசியமானது.

## வட்டக்குழு-கோட்டக்குழு-மாவட்டக்குழு

ஃ இக்குழுக்களின் செயற்பாடு தமிழீழ நிர்வாக சேவையின்சட்டதிட்டங்கள்(யாப்பு) வழிகாட்டியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் வழிகாட்டல்களிற்கு அமைவாக இருக்கும் இக்குழுக்கள் அமைக்கப்பட்டதும் அவை தொடர்பான விபரம் மாசி 25 க்கு முன்பாக தமிழீழ நிர்வாக சேவைக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

ஃ கிராமமட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் நிலைய செயற் குழுவினால் பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் இனங்காணப்பட்டு வட்டக்குழு, கோட்டக்குழு ஆகியவற்றினால் முதன்மைப்படுத்தப்பட்டு வட்டப் பொறுப்பாளர், கோட்டப் பொறுப்பாளர் சிபார்சுடன் மாவட்டக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

ஃ மாவட்டக்குழு தன்னிடம் சமர்ப்பிக்கப்படும் முதன்மைப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களை அரசியற்துறை மாவட்டப் பொறுப்பாளரின் சிபார்சுடன் தமிழீழ நிர்வாக சேவைக்கு அனுப்பிவைக்கும் வேலைத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பான காலக்கெடு, முன் மொழியப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் ஒன்று கூடல்கள் தொடர்பாக,

01. காலம்.
02. ஒன்று கூடல் நடைபெறும் இடம்.
03. ஒன்று கூடலில் கலந்து கொள்பவர்கள் தொடர்பான விபரங்கள் முன்கூட்டியே தமிழீழ நிர்வாக சேவையினால் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

(1) பிரதான உணவகம், திருநெல்வேலி
(2) பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம்
(3) ஆனந்த குமாரசாமி பெண்கள் விடுதி உணவகம்
(4) இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம்
(5) இராமநாதன் நுண்கலைக்கழக பெண்கள் விடுதி உணவகம்
(6) மருத்துவபீட உணவகம்
(7) கைதடி, சித்த மருத்துவத்துறை உணவகம்

ஆகிய உணவகங்களை நடாத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 15-12-1994 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் தனித்தனியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-ம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-ம் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரு விண்ணப்பப்படிவம் ஒரு உணவகத்திற்கு விண்ணப்பிப்பதற்கே உபயோகிக்கலாம். விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்:

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் எம்மிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

-பதிவாளர்

(சி-10839)



# உடனடி வேலை வாய்ப்பு

**தட்டெழுத்தாளர் (தமிழ்)**

தமிழ் தட்டெழுத்தாளர் ஒருவர் உடனே தேவை. வயது: 18 - 40 வயதுக்கிடையில். ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
கல்வித் தகைமை: க. பொ. த. (சா / த). கணிதத்திலும், தமிழிலும் விசேட சித்தி இருத்தல் வேண்டும். ஆங்கிலம் மேலதிகத் தகைமையாகக் கணிக்கப்படும்.
சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

**செயலாளர்:**

கல்வித் தகைமை: குறைந்தது க. பொ. த. (உ / த) அல்லது பட்டதாரி. தமிழில் விசேட புலமை இருப்பது விரும்பத்தக்கது.

க. பொ. த (சா / த) வில் தமிழையும் ஒரு பாடமாக எடுத்து அதில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் நன்கு எழுத, பேச, வாசிக்கவும், கடிதத் தொடர்புகளை மிக இலகுவாக கையாளக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.
வயது: 20 - 50 வயதுக்கிடையில்.

**முடிவுத் திகதி:- 15-12-94**

விள. இல. 361, மே/பா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(10281)



# மலிவு விற்பனை

டி.எஸ்.ஐ., றன்பா, பாட்டா பாதணிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். ரொக்கத்திற்கு கொள்முதல் செய்யும் போது வர்த்தகர்களுக்கு 15% கழிவு கொடுக்கப்படும்.

விற்பனை நடைபெறும் இடம்:-

**276, பலாலி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(10282)


## விதை உருளைக்கிழங்கு வந்தது

குமண கப்பலில் விதை உருளைக்கிழங்கு எடுத்து வரப்பட்டுள்ளது. இது பசுமை நிறுவனத்தினால் விவசாயிகளிற்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்காக முற்பணம் செலுத்தியவர்கள் ஒரு பெட்டி 2900 ரூபாவாகவும் முற்பணம் செலுத்தாதவர்கள் ஒரு பெட்டி 3500 ரூபாவாகவும் பசுமை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலைப்பீடபரீட்சைமுடிவுகள் 4 மாதங்களுள் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக உள்வாரி கலைப்பீட மாணவர்களுக்குபரீட்சை நடைபெற்ற திகதியில் இருந்து நான்கு மாதங்களுக்குள் பெறுபேறுகள் கிடைத்துவிடும் என யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை தாம் அறிவோம் எனவும் பரீட்சை முடிவுகள் தாமதத்தால் கடந்த காலங்களில் பல மாணவர்கள் சில நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காது போனதையும் கருத்தில் கொண்டே இனி வரும் காலங்களில் பரீட்சை முடிவுகள் உரிய காலத்தில் வெளிவரும் என அவர்மேலும் தெரிவித்தார். (05)


# இன்று ஆரம்பமாகின்றது

1995-ம் கல்வி ஆண்டிற்கான
சனி - ஞாயிறு முழுநேர வகுப்புக்கள்

## O/L, ஆண்டு 10, 9

கணிதம்
திரு. சதீஸ்
திரு. சங்கர்

விஞ்ஞானம்
திரு. இரா. செல்வவடிவேல்
திரு. தயாநிதி

ஆங்கிலம் — திரு. கிரிதரன்
தமிழ் — திரு. ஆர்த்திகன்
சமூகக்கல்வி — திரு. கியூபேட்

வர்த்தகம் — திரு. அற்புதராஜா
சைவசமயம் — திரு. கிரிதரன்
கிறிஸ்தவம் — திரு. கொலின்ஸ்

# புதிய உயர் கல்லூரி

## ஆரியகுளம்சந்தி - யாழ்ப்பாணம்

(சி-10840)

சிந்தனைக்கு

நீ கழுதை என மூன்று பேர் சொன்னால் கடிவாளம் பூட்டிக்கொள்

-ஸ்பானிய பழமொழி


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2339 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05


# உலக வங்கியின் நெருக்குதல்

வழமை போலவே சமூக நலத்திட்டங்களுக்கு எதிரான பரிந்துரைகளை உலகவங்கி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்குக் கொடுத்துள்ளது. சமூக நலத்திட்டங்களை அள்ளிவீசி தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா குமாரதுங்காவிற்கு இது உவப்பளிக்கும் செய்தியாக இருக்கப் போவதில்லை.

'சிறிலங்கா அரசாங்கம் இலவசமாகவும், மானியமாகவும் பொருட்களைத் தொடர்ந்தும் மக்களுக்கு வழங்கிக் கொண்டே இருக்குமானால் அது பெரும் பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும்' என்பதே உலகவங்கியின் எச்சரிக்கையாகும். அரசின் இவ்வாறான நடவடிக்கை பொருளாதார வளர்ச்சியையும், உற்பத்தியையும், வேலைவாய்ப்பு அதிகரிப்பையும் பாதிக்கும் என்பதே எச்சரிக்கைக்கான அடிப்படையாகக் கூறப்படுகின்றது.

உலக வங்கி எச்சரித்திருப்பது போல் சந்திரிகா அரசாங்கம் மேற்கொள்ளும் சமூக நலத்திட்டங்கள், வெறுமையாகவுள்ள திறைசேரியைக் கொண்ட சிறிலங்காவின் பொருளாதாரத்தைக் கணிசமான அளவில் பாதிப்படையச் செய்யக் கூடியதுதான். இச் சமூக நலத் திட்டங்கள் உற்பத்தியாளர்களின் முயற்சிக்குக் குந்தகமாக அமைவதினால் உற்பத்தியில் வீழ்ச்சி அடையும் அதேவேளை சமூக நலத்திட்டங்கள் செலவீடு அதிகரிப்பதினால் பாதிப்புக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாது என்பதே வாதமாகும்.

இந்தவகையில் சந்திரிகா அரசாங்கம் ஒரு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என்றே கூறலாம். ஆனால் உலகவங்கியின் இவ் எச்சரிக்கையானது தனியாக சமூகநலத் திட்டங்களில் அரசாங்கம் காட்டும் அக்கறையினாலா? அல்லது வேறு காரணங்களும் அதில் உள்ளனவா என்பதும் முக்கியமானதாகும்.

சந்திரிகா பிரதமராகவும், நிதி அமைச்சராகவும் பதவி ஏற்று நூறு நாட்களைக் கடந்து விட்ட நிலையில் அரசாங்கம் தனது பொருளாதாரக் கொள்கையைத் தெளிவாக முன்வைக்கவில்லை. திறந்த பொருளாதாரக் கொள்கையையே தமது கொள்கை என சந்திரிகா அரசாங்கம் கூறியிருப்பினும், அந்நிய முதலீட்டார்களை அது திருப்திப்படுத்துவதாகத் தெரியவில்லை போல் உள்ளது.

இதேசமயம் கடந்த ஐ.தே.க. அரசாங்கம் எவ்வளவோ ஊதாரித்தனமான செலவீடுகளைச் செய்த

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்

# பளை கல்விக் கோட்டத்தில் மத்திய கல்லூரி முன்னணி

(தென்மராட்சி)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன் தினமிரவு பளை கல்விக்கோட்டத்திற்கு வந்துசேர்ந்தனபெறுபேறுகள் கிளிநொச்சியிலிருந்து கிளாலியூடாக எடுத்துவரப்பட்டன.

பெறுபேறுகளின்படி பளை மத்திய கல்லூரியில் ச. திவாகர்- 157 புள்ளிகள். இவரே பளை கோட்டத்தில் அதி உயர் புள்ளிபெற்ற மாணவராவார். இதே பாடசாலையில் வ. விஜிதா- 146 புள்ளிகள்

கிளி/ பளை தர்மகேணி அ. த. க. பாடசாலையை சேர்ந்த சு. புஷ்பமலர்- 136 புள்ளிகள்

கிளி/ பளை சோரன்பற்று அ. த. க. பாடசலையைச் சேர்ந்த கி. தர்ஷா- 144 புள்ளிகள்

பளை கோட்டத்தில் இம்முறை இப் பரீட்சையில் 140 மாணவர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது, (86)

# யாழ். மாவட்டத்தில் பணியாற்ற புதிய டாக்டர்கள் பின்னடிப்பு

## யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவத்துறையில்பயின்றுவெளியேறும் டாக்டர்கள் யாழ் மாவட்டத்தில் பணிபுரிய மறுக்கின்றனர். இதே வேளை இவர்கள் தென்னிலங்கையில் உள்ள அடிமட்ட கிராமங்களுக்குச் சென்று சேவையாற்றுவதில் ஆர்வம் காட்டுவதாக யாழ் போதனா மருத்துவ மனைப் பணிப்பாளர் கவலை தெரிவித்துள்ளார்.

தமது வசதி வாய்ப்பை பாராது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பெரும் வசதிக் குறைவின் மத்தியில் சேவையாற்றும் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர் இவர்களுக்கு தேவையான கல்வியை தம்மைவருத்தி கற்றுக்கொடுத்தும் இந்த மாவட்டத்தின் வளத்தில் தமது கற்கைநெறியை மேற்கொள்ளும் இவர்கள் இறுதித்தேர்வில் தேறியதும் குடாநாட்டையே விட்டுவெளியேறி தமது வசதி வாய்ப்பை மட்டும் கருத்தில் கொண்டு தென்னிலங்கைக்கு செல்வதிலே ஆர்வம் காட்டுகின்றனர்.

இவர்களின் இச்செயலானது யாழ்மாவட்ட மக்களை பெரிதும் பாதிக்கக் கூடிய ஒன்றாகவே உள்ளது. இதனால் வருடா வருடம் யாழ் போதனா மருத்துவமனையில் டாக்டர்களுக்கான பற்றாக்குறை அதிகரித்து செல்கின்றது.

மேற்படி டாக்டர்களின் பற்றாக்குறை வரும் வருடத்தில் 29ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

தென்னிலங்கைக்கு படையெடுக்கும் யாழ் மாவட்டத்தில் கற்றுப் பட்டம் பெறும் டாக்டர்களினால் தென்னிலங்கை கிராமங்களில் உள்ள சாதாரண மருத்துவமனைகளில் ஒன்றுக்கு மூன்று டாக்டர்கள் வீதம் பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

# தஞ்சை தமிழாராய்ச்சி மாநாடு 10 இலங்கைப் பிரதிநிதிகள் செல்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டில் தஞ்சாவூரில் நடைபெறவுள்ள ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு இலங்கைக் கிளை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க பிரதிநிதிகள் 10 பேர் கலந்து கொள்ள உள்ளனர்.

இம் மாநாட்டிற்கு ''உலகளாவிய தமிழர் குடிப்பரம்பலும் உலகத்தமிழ் இயக்கத்தின் 20 ஆண்டுகாலப் பணியும்'' என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் கட்டுரை ஒன்றினை அனுப்பியுள்ளார்.

மேற்படி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக செல்லும் இவ் இயக்கப் பிரதிநிதிகள் பாண்டிச்சேரி உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தினர் நடத்தும் கலந்துரையாடல் ஒன்றிலும் கலந்து கொள்ளவுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# ஐ. தே. க. பிரதித்தலைவர் நியமனம் இனி இல்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளதை அக் கட்சியின் தேசிய செயற்குழு அங்கீகரித்துள்ளது.

கோட்டே சிறிகோத்தாவிலுள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில்தேசிய செயற்குழு கூடியபோது ஜனாதிபதி தேர்தலில் மாற்று வேட்பாளராகப் போட்டியிட்ட சிறிமா திசாநாயக்காவுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அத்துடன் கட்சிக்கு பிரதித் தலைவர் ஒருவரை தெரிவு செய்வதில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது.

# மின்பிறப்பாக்கிகள் இயங்க மாதம் 50 பரல் டீசல் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட மருத்துவ மனைமின்பிறப்பாக்கிகளுக்கு 50 பரல் டீசல் மாதாந்தம் தேவையென பிராந்திய பணிப்பாளர் பணிமனை கேட்டுள்ளது.

அண்மையில் கொழும்பிலிருந்து 14 மின்பிறப்பாக்கிகள் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட மருத்துவ மனைகளுக்கென கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

மேற்படி மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்துவதனால் மாதாந்தம் 50 பரல் டீசல் கொழும்பிலிருந்து அனுப்பி வைத்தாலே அவற்றை பாவிக்க முடியுமெனவும், அதற்கானடீசலை தமக்கு அனுப்பி வைக்கும்படி யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனைகேட்டுள்ளது [சி]

# பல்கலை. நூலகர் பதவி 7 மாதங்களாக வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ''நூலகர்'' பதவி வெற்றிடம் கடந்த ஏழு மாதகாலமாக நிரப்பப்படாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்திற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் இடையில் உள்ள இழுபறி நிலையே இந்தப்பதவி நிரப்பப்படாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ளமூத்த விரிவுரையாளர்களுக்கு பேராசிரியர் பட்டம் வழங்குவதிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பின்னடிப்பதாகவும் தெரிய வருகிறது. (05)

# கல்குடாவில் மீண்டும் வெள்ள அபாயம்

(மட்டக்களப்பு)

கல்குடாவில் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கடும் மழையினால் வாழைச்சேனை, மீராவோடை,ஒட்டமாவடி, மாஞ்சோலை உட்பட சில சிறிய கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரமே மட்டக்களப்பில் பெரும் வெள்ளம் ஏற்பட்டிருந்தது. தற்போது இவ் வெள்ளம் வடிந்து வருகையில் மீண்டும் அங்கு மழைபெய்து வருகிறது-

தமிழீழ முதனிலை தேர்வு

# சங்கானை கோட்டத்தில் அதிக புள்ளி பெற்றோர்

(தொல்புரம்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் 1994 ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற ஐந்தாம் ஆண்டு இறுதித் தேர்வான தமிழீழ முதனிலைத் தேர்வுக்கான பெறுபேறுகளின் படி சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு:

சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியசாலையைச் சேர்ந்த செல்வரத்தினம் அகிலன் 458 புள்ளிகளையும், பொன்னாலை வரதராசப்பெருமாள் வித்தியாசாலையைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் உமைபாலன் 438 புள்ளிகளையும், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி சாந்தினி மயில்வாகனம் 437 புள்ளிகளையும் பெற்று 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களை பெற்றுக் கொண்டவர்கள் ஆவார். (41)

# உரவகை கிடைக்கும்

யாழ். கமநல சேவைத் திணைக்களத்திற்கு இம்மாத இறுதியில் உரவகைகள் 'மாகோ' கப்பலில் எடுத்து வரப்படவுள்ளது.

தற்போது இங்கு நிற்கும் கப்பல் கொழும்புக்குச்சென்று திரும்பி வரும் போது ரி. டி. எம் 100 மெட்றிக் தொன் உருளைக் கிழங்கு கலவை 100 மெட்றிக்தொன் என்பன எடுத்து வரும். என கமநல சேவை திணைக்கள அதிகாரி ஒருவர் செய்தியாளருக்கு தெரிவித்தார். (யே)

எவோ ஊதாரித்தனமான செலவீடுகளைச் செய்த போதும் உலகவங்கியின் பணிப்புக்களை தொடர்ந்து அமுல்படுத்தியே வந்தது. இதன் காரணமாகவே ஆசியாவிலேயே தனியார் மயமாக்கலில் முன்னணி நாடு என்ற பாராட்டை உலகவங்கியிடம் அதனால் பெற முடிந்தது. இதைப்போன்றே திறந்த பொருளாதாரக் கொள்கையையும் தெளிவாக, எந்தவித தளர்பலும் இன்றி உறுதிப்படுத்தியிருந்தது.

ஆனால், பொ.ஐ.மு. அரசாங்கத்தைப் பொறுத்து இவ்வாறான உறுதிப்பாடு குறைவதாகவே உலக வங்கியால் கருதப்படுவது போல் தெரிகின்றது. அதற்குச் சில அறிவிப்புக்களும் காரணமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபையை மீண்டும் அரச உடைமையாக்குவது போன்ற பேச்சுக்களைக் குறிப்பிட முடியும்.

இந்தவகையில் பொ.ஐ.முன்னணி அரசாங்கம் உலக வங்கியைத் திருப்திப்படுத்தத் தவறிவிட்டது என்பதில் ஐயப்பாடில்லை. இந்நிலையே முதலீட்டாளர்கள் தொடர்பாகவும் உள்ளது. இதைப்பிரதிபலிப்பதுபோன்றே பங்குச்சந்தை ஸ்திரமான நிலையை அடையாமையைக் குறிப்பிட முடியும். முதலீட்டாளர்கள் சந்திரிகா அரசில் பூரண நம்பிக்கை கொள்ளாமையே இதன் வெளிப்பாடாகவுள்ளது.

ஆனால், இதற்காக சந்திரிகா அரசாங்கத்தால் சமூக நலத்திட்டங்களைக் கைவிட முடியுமா என்பது கேள்வியே. இது அவரது ஆட்சியையே ஆட்டம் காணச்செய்து விடும். ஏனெனில் இவை குறித்த வாக்குறுதிகளை வழங்கியே பொ.ஐ.முன்னணி ஆட்சியைப் பிடித்ததெனலாம்.

ஆகையினால் உலகவங்கி கூறுவதற்கு ஏற்ப சமூக நலத்திட்டங்களை நிறுத்துவதென்பது விஷப்பரீட்சையாகவே இருக்கும். ஆனால் இதற்கு மாற்று வழி இல்லாமல் இல்லை. சிறிலங்கா அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கும் போரை நிறுத்தின் சமூக நலத்திட்டங்களுக்குப் போதிய நிதியை அது பெற்றுத் தரும். இன்று சுமார் 2500கோடி ரூபாவில்இருந்து 3000 கோடி ரூபா வரை சிறிலங்கா அரசு போருக்காகச் செலவிடுகின்றது. இது சிறிலங்கா அரசு அறிவித்த சமூகநலத் திட்டத்திற்குத் தாராளமாகப் போதுமானதாகும்.

இந்த நிலையில் உலகவங்கியின் நெருக்குதலில் இருந்து விடுபட இரு காரியங்களைச் செய்தால் சந்திரிகா அரசாங்கத்தால் நெருக்கடியை சுலபமாக தாக்குப் பிடிக்க முடியும். ஒன்று தெளிவாக தமது பொருளாதாரக் கொள்கையை அறிவித்தல். இரண்டு யுத்தத்தை நிறுத்துதல். ஆனால் இவ்விரண்டும் புதிய அறிவிப்புக்களும் அல்ல. இவ்விரண்டும் ஒருவகையில் தேர்தல் வாக்குறுதிகளே.

அலுவலகத்தில்தேசிய செயற் கிறது.

# வினாவங்கி ஆசிரிய தெரிவு தாமதமான விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கை பரீட்சைத்திணைக்களம் திட்டமிட்டுள்ள பரீட்சை வினாக்கள் வங்கிக்கு வினாக்களை தயாரிக்கக் கூடிய ஆசிரியர்களிடமிருந்து பரீட்சைத்திணைக்களம் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி கடந்த மாதம் 15 ஆம் திகதியாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கான இது குறித்த அறிவுறுத்தல் படிவங்கள் நேற்று முன்தினமே கிடைக்கப்பெற்றதாக ஆசிரிய வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புச் சந்தையில்

# மொத்த வியாபாரிகளினால் பொருள் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியில் ஈடுபட்டுள்ள சில மொத்த வியாபாரிகளின் மறைமுக நடவடிக்கைகளாலேயே பொருட்களின் விலை உயர்வு கொழும்புச் சந்தையில் ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது, குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருமளவு பொருட்கள் இருப்பில் வைத்துள்ள போதும் மொத்த வியாபாரிகள் தன்னிச்சையாக உயர்த்திய விலைகளுக்கே பொருட்களை சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது.

எந்த வித நியாயமுமின்றி இரவோடிரவாக மொத்த வியாபாரிகள் அத்தியாவசிய பொருட்களான பருப்பு, சீனி மற்றும்அரிசிபோன்றவற்றின் விலைகளை உயர்த்தி வருவதாக சில்லறை வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மண்டைதீவு கடலில் பீரங்கிப்படகு தாக்குதல்

(குருநகர்)

மண்டைதீவுக்கு அப்பால் மாதவமுனைப் பகுதிக்கு கடந்த சனி அதிகாலை 2-30 மணியளவில் வந்து சேர்ந்த சிறிலங்கா கடற்படையின் பாரிய கப்பலில் இருந்து கடலில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டவர்கள் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பீரங்கிக் குண்டுகள் ஏவப்பட்ட இத்தாக்குதலில் இருந்து மீனவர்கள் தப்புவதற்காக தொழிலை இடைநடுவில் விட்டுக் கரைவர நேர்ந்தது.

சாதுரியமாக மீனவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக எவருக்கும் எதுவித பாதிப்பும் நிகழவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது

(21)

ருக்கு தெரிவித்தார். (யோ)

திருமதி திசாநாயக்காவிடம்

# காமினி கொலை விசாரணை; பொலிஸ் குழு விபரித்தது

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா கொலை தொடர்பான விசாரணைகளின் தற்போதைய நிலை குறித்து பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று திருமதி திசாநாயக்காவிற்கு விளக்கமளித்தது.

பொலிஸ்மா அதிபர் பிராங்டி சில்வாவின் பணிப்பின் பேரில் பொலிஸ் குழு திருமதி திசாநாயக்காவின் வீடு சென்று அவரை சந்தித்தது. தமது கணவரின் கொலை விசாரணை முன்னேற்றம் குறித்து தமக்கும் தெரியத்தர வேண்டும் என அவர் விடுத்த கோரிக்கையை அடுத்தே பொலிஸ் குழு திருமதி திசாநாயக்காவை சந்தித்தது.

இச்சந்திப்பின் போது வீடியோ கசற்றுகள் மூலமாக இன்னமும் தற்கொலை கொலையாளியை சரியாக அடையாளம் காணமுடியவில்லை என பொலிஸ் குழுவினர் தெரிவித்தனர். இச்சந்திப்பின் போது காமினியின் புதல்வர்களும் குடும்ப சட்ட ஆலோசகர்களும் உடனிருந்தனர்.

# மட்டு. புறநகர் பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புறநகர் பிரதேசங்களான சின்ன ஊறணி, இருதயபுரம், மாமாங்கம் போன்ற இடங்களில் சமீப காலமாக கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இப்பகுதிகளில் ஆறு வீடுகள் கொள்ளையிடப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கைத் துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகள் என்பனவற்றுடன் செல்லும் கோஷ்டியொன்றே இக் கொள்ளைகளில் ஈடுபடுவதாகவும் மேலும் தெரியவருகிறது.

# பளை வைத்தியசாலைக்கு புதிய மின்பிறப்பாக்கி

(தென்மராட்சி)

பளை அரசினர் வைத்தியசாலைக்கு 17 கிலோவாற் புதிய மின்பிறப்பாக்கி ஒன்று கிடைத்துள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் மின்சாரம் எதுவும் இல்லாமல் சில மருந்துகளை குளிரூட்டி பாதுகாக்க முடியாதநிலை இருந்து வந்தது.

தற்போது இம் மின்பிறப்பாக்கியினால் மருத்துவமனைக்கு பல மருந்து வகைகளை பேணிப்பாதுகாக்க முடியும் எனத்தெரிவிக்கப்படுகிறது. (86)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12 05**
**திங்கள் இரவு**

08.01- தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08.20- தாயகப் பாடல்கள்
08.30-செய்திகள்
08.40-தரிசனம் - மிருதங்க கலைஞர் சங்கீத ரத்தினம் சி. மகேந்திரன் அவர்களுடனான செவ்வி
09.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994-12-06**
**செவ்வாய் காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15-இன்றைய தாரகை
07.30-செய்திகள்
07.35-பத்திரிகைச் செய்திகள்
07.40-தாயகப் பாடல்கள்
08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# லலித் கொலை ஆராயும் ஆணைக்குழு முன்னைய முயற்சிகளையும் ஆராயும்

முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டமை தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு 23 ஏப்ரல் 93 இல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பற்றி மட்டுமல்லாமல் அதற்கு முன்பான கொலை முயற்சிகள் குறித்தும் ஆராய இருக்கிறது.

23 ஏப்ரல் 93 இல் கொழும்பு கிருலப்பனை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் லலித் அத்துலத்முதலி உயிரிழந்தது தெரிந்ததே.

1991 ஆம் ஆண்டின் நவம்பர் 2-ம் திகதியன்று பன்னலவிலும், 1992 ஏப்ரல் 23 ஆம் திகதியன்று பிலியந்தலவிலும், 1992 ஆகஸ்ட் 7 ஆம் திகதியன்று கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாகவும், 1992 ஆகஸ்ட் 29 ஆம் திகதியன்று தெகிவளையிலும் லலித் அத்துலத் முதலியை கொலை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

## லலித்தின் கொலைக்கு பாதுகாப்பு இன்மை காரணமா?

### ஆணைக்குழு ஆராயும்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவருமான லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டமைக்கு கிருலப்பனையில் நடைபெற்ற கூட்டத்திற்கு பாதுகாப்பு வழங்கப்படாமையும் ஒரு காரணமா என்பது குறித்து ஜனாதிபதி ஆணைக்குழுஆராயும். நீதி அமைச்சரும், அரசியலமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், இது பற்றி மேலும் கூறுகையில், பாதுகாப்பு வழங்கப்படாமைக்கு நேரடியான அல்லது மறைமுகமான உத்தரவு எதுவும் வழங்கப்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டோர் மீதும் விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் பாதுகாப்பு தேவை குறித்து கோரிக்கை விடப்பட்டிருந்தபோதும் அது புறக்கணிக்கப்பட்டதா என்பது பற்றியும் ஆராயப்படும் எனத் தெரிவித்தார்.

## வானோசை வெளிவந்துள்ளது

அக்டோபர்- நவம்பர் மாதங்களுக்கான வானோசை இதழ் வெளிவந்துள்ளது, 'உடலுக்குள் ஓடும் கடிகாரம்' 'தேனீக்களின் கூட்டு வாழ்க்கை' மற்றும் மனநோய் பற்றிய கட்டுரைகளும் மேலும் பல அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

## தொலைக் கல்வி அமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை தொலைக்கல்வி நிலையத்தில் ஐந்து நாள் தொடர் அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் ஆரம்பமாகும் இவ் அமர்வுகளில் பகுதி 1, பகுதி 2 தொகுதி ஆசிரிய மாணவர்களையும் போதனாசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் எல். ஓங்காரமூர்த்தி கேட்டுள்ளார்.

## பரீட்சை மண்டப ஒழுங்கு

(தென்மராட்சி)

கிளி/ பளை கல்விக்கோட்டத்தில் இன்று நடைபெற இருக்கும் க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்காக நான்கு மண்டபங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பளை மத்திய கல்லூரியில் மூன்று மண்டபங்களும் கிளி/ பளை வேம்பொடுகேணி அ.த.க. பாடசாலையில் ஒரு மண்டபமும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது இப்பரீட்சை நிலையத்திற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்மாவட்ட வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளரினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. (86)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி; 30 முகவர்நிலையங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக கூறி மோசடிகளில் ஈடுபட்ட 30 முகவர் நிலையங்களை சிறிலங்கா பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

கொழும்பில் இயங்கி வந்த இந்த முகவர் நிலையங்கள் பலரிடம் இலட்சக்கணக்கான ரூபா பணத்தை மோசடி செய்திருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தரகர்கள் மூலமாக இம்முகவர்கள் - வெளிநாடுகளுக்கு செல்ல முயலுவோரை அணுகி அவர்களிடம் பணம் பறித்து வந்ததாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# பதினான்கு நாடுகளுக்கும் புதிய தூதுவர்கள் நியமனம்

[கொழும்பு]

பதினான்கு நாடுகளுக்கான தூதுவர்கள் தற்போதைய அரசாங்கத்தால் புதிதாக நியமனம் செய்யப்படவுள்ளனர்.

முந்திய ஐ. தே. க அரசினால் நியமிக்கப்பட்ட இந்நாடுகளுக்கான தூதுவர்கள் டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்பாக நாடு திரும்புமாறு அழைக்கப்பட்டிருப்பதையடுத்து இப்புதிய தூதுவர்கள் நியமிக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது

அவுஸ்திரேலியா, பங்களாதேசம், பிரான்ஸ், ஹங்கேரி இந்தியா, இத்தாலி மலேசியா, தென்கொரியா, சவூதி அரேபியா, சுவீடன், தாய்லாந்து, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளிற்கான இலங்கைத் தூதுவர்களும், அமெரிக்க நியூயார்க் நகரிலுள்ள ஐ.நா. சபைக்கான நிரந்தரப் பிரதிநிதிகளும் திரும்பிவரும்படி அழைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. இதனால் ஏற்படும் வெற்றிடங்கள் புதியவர்களால் நிரப்பப்படவுள்ளன.

### சிங்கப்பூரில்

பட்ட அசாதாரண கால நிலையையடுத்து இக் கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கப்பல் திருத்த வேலைக்கு சென்றிருப்பதாக தெரியவருகிறது.

இக் கப்பலில் உள்ள ஜெனரேட்டர் பழுதடைந்திருந்ததினால் முன்னர்நோயாளிகள் கப்பல் சேவை ஓரிரு தடவை தடைப்பட்டிருந்ததும் தெரிந்ததே. திருத்த வேலைகள் முடிவடைந்ததும் மீண்டும்இக் கப்பல் சேவையில் ஈடுபடும். (யோ)

### கல்முனை

என்பவரே கொல்லப்பட்டவரெனத்தெரிவிக்கப்படுகிறது.

குருநகர் திலீபன் சிற்றூரைச் சேர்ந்த பத்மநாதன் உதயகுமார் (வயது 22) என்பவர் சகதொழிலாளிகளுடன் நீந்திவந்து இடையில் காணாமல் போயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுடன் வள்ளங்களில் கூட தொழில் செய்யப்போயிருந்தவர்ளான பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து பொலிகண்டியில் வசிக்கும் அல்பிரட் உதயகுமார் (வயது 19) மண்டைதீவிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்புத்துறையில் வசித்துவரும் யேசுதாசன் அன்ரனி ஜெனிதாஸ் (வயது 17) மற்றும் குருநகர் திலீபன் சிற்றூர் பகுதியைச் சேர்ந்தவர்களான அன்ரனி ஜெகன் (வயது 18), கீதபொன்கலன் குணபால் (வயது 27) ஆகியோரே உயிர்தப்பிக் கரை வந்து சேர்ந்தவர்களாவர்.

இறந்தவர் மற்றும் காணாமல் போனவர்களைத் தேடிச் சென்றவர்கள் சேதமடைந்த வள்ளங்களையும் வெளி இணைப்பு இயந்திரங்களையும் மீட்டு வந்தனர்.

நேற்று இச்செய்தி எழுதப்படும்வரை மேற்படி இருவரது சடலங்களோ, மேலதிக தகவல்களோ எதுவும் அறியப்படவில்லை. (21)

### கோமாரி

தித்துறையில் பொருள்களை இறக்கிக்கொண்டிருந்த 'குமண' கப்பல் திருகோணமலைக்கு இன்று அவசரமாக புறப்படவுள்ளது. இக்

## ஜனாதிபதியின் செய்தி தொடர்பாளராக சூலவன்ச

(கொழும்பு)

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் பத்திரிகை செய்தி தொடர்பாளராக பிரபல பத்திரிகையாளரான சூலவன்ச சிறிலால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி சந்திரிகா பிரதமராகப் பதவி வகித்த போதும் அவரது பத்திரிகை செயலாளராக சூலவன்ச நியமனம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

### ஏகாதிபத்திய

பிரிட்டிஷ் மகாராணியே நியமித்து வந்தார் அவர் பிரிட்டிஷ் அரசின் பிரதிநிதியாக இங்கு கடமையாற்றினார். சிறிலங்காவில் சிலமுறை அரசியல் சட்டங்கள் மாற்றப்பட்ட போதிலும் இவ் அடிமைச் சின்னங்கள் மட்டும் மாற்றப்படாது இன்னும் சம்பிரதாய பூர்வமாக உபயோகிக்கப்பட்டுவருகிறது,

### 4 பிரிகேடியர்கள்

பவர்களின் சேவையை எது விதத்திலும் நீடிக்கவோ புதுப்பிக்கவோ

# உதவிப்பொலிஸ் அதிகாரி கொலை; பாதாள உலக முக்கியஸ்தர் கைது

(கொழும்பு)

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று தொடர்பாக பாதாள உலகத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் வெல்லம்பிட்டிய பொலிசாரால் கைது செய்யப்பட்டு உள்ளார்.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரான உபாலி பெரேரா என்பவரை 31 டிசம்பர் 1992 -ம் திகதியன்று முல்லேரியாவ வீதியில் வைத்து கைக்குண்டு வீசித் தாக்கிக்கொன்றதாக இவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. உபாலி பெரேரா அப்போது முல்லேரியாவ பொலிஸ் பகுதியில் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலகக் கிரிமினல் பல்வேறு குற்றச் சம்பவங்களுடனும், கிரிமினல் நடவடிக்கைகளுடனும் தொடர்புடையவர் எனவும் பொலிசார் கூறியுள்ளனர்.

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரி பெரும் நெருக்கடிநிலையில்

### வைத்தியர்கள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் செயல்படும் தெல்லிப்பழை அரசாங்க வைத்தியசாலையில் வைத்தியர், உபகரணங்கள், தளபாடப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இங்கு நோயாளர் சிகிச்சை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இராணுவ நடவடிக்கையை அடுத்து தெல்லிப்பழையில் இயங்கிய இந்த வைத்திய சாலை தற்காலிகமாகமானிப்பாயில் செயற்படுகின்றது.

இங்கு கட்டட பற்றாக் குறையுடன்°வைத்தியர், தாதிமார் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

நோயாளர் படுக்கைக்கான கட்டில்கள் அசுத்தம் அடைந்தே காணப்படுகின்றன. உள்பகுதி சீராக துப்புரவு செய்யப்படுவதில்லை.

இவற்றினால் நோயாளர்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். தளபாடங்களுக்கும் பெரும் பற்றாக்குறை உள்ளது.

இரவுப் பொழுதுகளில் வெளிச்சம்இன்மையால்இங்கு தங்கிசிகிச்சை பெறும் நோயாளர்களே விளக்கை கொண்டு வந்து உபயோகிக்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் குழந்தைகள், சிறுவர்களுக்கான வைத்திய சிகிச்சைக்கு போதியளவு வைத்தியர்கள்

### பிரச்சினைக்கு

முதலீடுகள் செய்யப்படாமல் அடுத்த நூற்றாண்டில் கைத்தொழில் நாடாக இலங்கை வரமுடியாது இதற்கு அமைதி தேவை.

கேள்வி- இப்பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு உங்களது ஆதரவு கிடைக்குமா?

பதில்: நாம் முட்டுக் கட்டையாக இருக்க மாட்டோம் சாத்தியமான உதவி தேவையெனில் அதற்கு உதவ தயாராகவே உள்ளோம்.

கேள்வி- விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் கடந்த காலங்களில் முக்கிய பங்காற்றியவர் இந்த வகையில் தற்போதைய அரசின் அணுகுமுறை தொடர்பாக உங்களின் கருத்து என்ன?

பதில்: இவர்களுடையபேச்சுவார்த்தைத் திட்டம்

எமது தேசிய அரசியல்மேடையில் பிரதான இடத்தைப் பெற்றது. 1983ஆம் ஆண்டின் பின்னர்தான் 1984 ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு ஆறு வார காலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காணும் நோக்குடன் நான் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வந்தேன். இது பகிரங்கமாக பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் தினமும் நடைபெற்றது, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தேவையான வேளைகளில் இதில் கலந்து கொண்டார். டிசம்பர் 22ம் திகதி இந்தப் பேச்சுக்களில் நம்பிக்கை இல்லையென த. வி. கூ. கூறியது. அதே வேளையில் இப்பேச்சுக்களை எதிர்ப்பதாக கூறிய சிறிமாவோ தலைமையிலான

வரும் சமாதான முயற்சிகளுக்கு நாம் முட்டுக்கட்டையாக இருக்கமாட்டோம். இதனை சாத்தியமாக்க நாம் உதவ முடியுமானால்அதற்கும் நாம் தயார்.

கேள்வி- இந்த சமாதான முயற்சியில் என்ன விடயங்களை முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டுமென கருதுகிறீர்கள்?

பதில்: இந்தப் பிரச்சினைக்கான தீர்வு இந்த நாட்டிலுள்ள மூன்று இன மக்களுக்கும் பொருத்தமானதாக அமைய வேண்டும். இதேவேளையில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படும்போது விடுதலைப்புலிகளும் இணைந்ததாகவே இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விடுதலைப் புலிகளின் பங்கு இவ் விடயத்தில் முக்கியமானதாகும். அவர்களின்

இங்கு கட்டட பற்றாக் குறையுடன் வைத்தியர், தாதிமார் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது மழைகாலம் என்பதால் மழைநீர் ஒழுக்கும் உள்ளது. ஜன்னல் கதவுகள் பல இடங்களில் இல்லாததால் படுக்கை அறைகளில் தூவானம் உட்செல்கின்றது.

## இந்தியாவிற்கான

எங்களுடைய பிரச்சினையை தீர்த்துக்கொண்டால் தமக்குள்ள ஒரு பிரச்சினை தீரும் என்பதே புதுடில்லியின் மனோபாவமாக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தென்னாசிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கான மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக பங்களாதேச தலைநகர் டாக்காவிற்குசெல்வதும், அங்கிருந்து திரும்பும் வழியில் புதுடில்லிக்கு செல்ல இருப்பதும் தெரிந்ததே.

வந்து உபயோகிக்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் குழந்தைகள், சிறுவர்களுக்கான வைத்திய சிகிச்சைக்கு போதியளவு வைத்தியர்கள் இல்லை என்றும் இதற்கான மருத்துவப் பொருள்களுக்கும் பெரும் பற்றாக்குறை உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (தி, பா)

## சீனி வந்தது

(வடமராட்சி)

யாழ் வர்த்தகர்கள் சிலருக்கு 'குமண' கப்பலில் சீனி எடுத்துவரப்பட்டு இறக்கப்பட்டுவருகின்றது. இக்கப்பலில் சுமார் 200 மெட்றிக் தொன் சீனி வந்துள்ளது. (யோ)

## பொலிசாரை

இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு முன்பாக பொலிசார் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி பரிசீலிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# ஆண்டு ஆறு அனுமதி 1995

கடந்த ஆகஸ்ட் 1994இல் நடைபெற்ற புலமைப் பரிசிற் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆண்டு ஆறு வகுப்புக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும் வெற்றிடங்கள் இருப்பின் அவை கடந்த நவம்பரில் நடைபெற்ற தமிழீழ இளநிலைக் கல்வித் தேர்வு (ஆண்டு 5 பரீட்சை)ப் பெறுபேறு அடிப்படையில் நிரப்பப்படும்

அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுக் கடிதத்தைச் சமர்ப்பித்துக் கல்லூரியில் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று 15-12-1994ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

4 - 12 - 94 - அதிபர்

(சி-10841)

பாக உங்களின் கருத்து என்ன?

பதில்: இவர்களுடையபேச்சுவார்த்தைத் திட்டம் தொடர்பாக இப்போது என்னால் எதுவும் கூறமுடியாது இப்பிரச்சினைக்கு தீர்வாக எவ்வாறான யோசனையை அரசாங்கம் முன்வைக்கப் போகிறது என்பது நாட்டு மக்களுக்கு இன்னும் கூறப்படவில்லை அவர்களுடைய யோசனை என்ன என்பதையும் நிரந்தரமான அரசியல் தீர்வைக் காண இது உதவப் போவது எப்படி என்பதைப் பொறுத்துமே வெற்றி தங்கியுள்ளது.

கேள்வி- இந்த சமாதான முயற்சிகளுக்கு தடையாக வரக்கூடியவை பற்றி எவற்றைக் கருதுகிறீர்கள்

பதில்: இவ்வாறான சமாதான முயற்சிகளில் எதிர்பாராத தடைகளும் ஏற்படலாம்அதேபோல்எதிர்பாராத முன்னேற்றங்களும் ஏற்படலாம். இப்படிப்பட்ட பேச்சுவார்த்தைகளில் முடிவு காணும் கட்டத்தை அடையும் போது எதிர்பாராத சில தடைகள் ஏற்படலாம். உதாரணமாக பலஸ்தீனப் பிரச்சினையில் யசீர் அரபாத் எதிர்பார்க்காத நிலையில் இப்போது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன பேச்சுவார்த்தைகள் நடத்திச் செல்லப்படும்போது இவ்வாறான தடைகள் ஏற்படத்தான் செய்யும். ஒரு வகையில் சொன்னால்-வாழு-வாழ இடம் கொடு- என்ற அடிப்படையில் இப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பதென்பது இலகுவானதாக இருக்கும். இந்த நிலைப்பாடு -இலங்கை பல்லின சமூகங்களை கொண்ட நாடாக இருப்பதனால் அவசியமாக இருக்கின்றது.

கேள்வி- கடந்த பதினேழு ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பு ஐ, தே. கவிடமே இருந்தது. இப் பிரச்சினைக்கு நீங்கள் தீர்வொன்றைக்காண முடியாமல் போனமைக்கு காரணம் என்ன?

பதில்: உண்மையில் இனப்பிரச்சினையானது

த. வி. கூ. கூறியது. அதே வேளையில் இப்பேச்சுக்களை எதிர்ப்பதாக கூறிய சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக்கட்சி இதிலிருந்து வெளியேறியது. அத்துடன் எமது அமைச்சரவையிலிருந்த சிறில் மத்தியூ இப்பேச்சுக்களை கண்டித்து பத்திரிகையில் பகிரங்க கடிதமொன்றை எழுதியிருந்தார். இந்த நிலைமைகளை அமைச்சரவை விரிவாக ஆராய்ந்தது.அப்போது ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேச்சுவார்த்தைகளை நிறுத்தப் போவதாக கூறினார். இதன் பின்னர் தான் இந்நாட்டில் ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்தது. இதற்கு தீர்வுகாண அன்றிருந்த சூழ்நிலையில் இந்தியாவின் உதவியும் அவசியமாக இருந்தது, இது இப்பிரச்சினைக்கான தீர்வுமுயற்சிகளை மேலும் சிக்கலாக்கியது இதன்மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகளில் மூன்று பங்காளிகளின் சம்பந்தம் தவிர்க்க முடியாததாகியது. இந்நிலையில் விடுதலைப்புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் அபிப்பிராய பேதங்கள் அதிகரித்து பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியை இது மேலும் கஷ்டமாக்கியது. இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதன்மூலம் இந்திய அமைதி காப்புப்படை வந்த பின்னர் பிரச்சினை ஒரு புதிய பரிமாணத்தை எடுத்தது. இந்த நிலைமையைத் தணிப்பதற்காக எடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கையாக ஜனாதிபதிபிரேமதாசாவிடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். இந்த பேச்சுவார்த்தைகள்பதினாலு மாத காலமாக நடைபெற்றது. எனினும் இப்பேச்சுவார்த்தைகள்வெற்றிபெறவில்லை இதற்கு பல காரணங்கள் உள்ளன. அவைபற்றி இப்போது பேசுவதில் பலனில்லை அவை அனைத்தும் பழங்கதை. ஆகவே இப்போது அரசாங்கம் மேற்கொண்டு

நததாகவே இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விடுதலைப் புலிகளின் பங்கு இவ் விடயத்தில் முக்கியமானதாகும். அவர்களின் பங்களிப்பு இல்லாமல் மேற்கொள்ளப்படும் எந்தஒரு முயற்சியும்நிரந்தரமானதீர்விற்கு உதவுவதாக அமையாது.

கேள்வி - இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி பிரேமதாசாவினால் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் இந்தத் தெரிவுக்குழுவின் முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடைந்தன. இதற்கு ஐ.தே.கவே பொறுப்பு என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?

பதில்: இதில்முக்கியமான விடயம்என்னவெனில்பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முயற்சிகள் ஒரு தோல்வியே அல்ல.முதல்முறையாக இந்த நாட்டில் சமஷ்டி முறையே அவசியம் என்பதை இக்குழுவே தனது யோசனை மூலம் வெளியிட்டது. இது ஒரு சரித்திரம். இது ஒரு பெரிய சாதனை. இந்நாட்டிலுள்ள இரண்டு பலம் வாய்ந்த கட்சிகளான ஐ.தே.கவும் சுதந்திரக் கட்சியும் இந்த சமஷ்டித் திட்டத்தை ஏற்றுக்கொண்டது ஒரு சாதனை தானே. ஆனால் வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதா - இல்லையா என்ற விடயத்தில் மட்டுமே பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் முடிவு எதையும் மேற்கொள்ள முடியவில்லை.

கேள்வி- ஆனால், உண்மையில்சிறுபான்மையின மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிதவாதக் கட்சிகள் கூட இதனை ஏற்கவில்லை. இந்த நிலையில் இதனை எவ்வாறு ஒரு சாதனை எனக் கூறமுடியும்?

பதில்: சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட யோசனையை இரண்டு பிரதான கட்சிகளும் ஏற்றுக் கொண்டமைசாதனைதானே உண்மையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பமாக இருந்த தமிழரசுக்கட்சி ஆரம்பித்ததே சமஷ்டியை நோக்கமாக கொண்டுதான்.

இறக்கிக்கொண்டிருந்த 'குமண' கப்பல் திருகோணமலைக்கு இன்று அவசரமாக புறப்படவுள்ளது. இக்கப்பலில் சுமார் ஆயிரம் மெற்றிக்தொன் மா எடுத்து வரப்படும். (யோ)

4 பிரிகேடியர்கள்

பவர்களின் சேவையை எது விதத்திலும் நீடிக்கவோ புதுப்பிக்கவோ இராணுவத் தலைமை விரும்பவில்லைஎனவும் தெரியவருகிறது.

# இதய அஞ்சலி

## திரு. இராமலிங்கம் சரவணமுத்து

[நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய அறங்காவல் சபை பொருளாளர்]

உதயம்: 07-07-1924 மறைவு: 04 12-1994

உறங்காது ஊருக் காய்
உழைத்து வந்த உத்தமனே!
அறங்காவல் பல புரிந்த
அகக்கருணை மிகு தலைவ!
திறங்காட்டி மிகவு யர்ந்த
சரவணமுத் தெனும் கோவே
அரன்தாழின் கீழ்ப் பணிகள்
ஆற்றுதற்குச் சென்ற னையோ?

- நாயன்மார்கட்டு சனசமூக நிலையம்,
- ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய தண்ணீர்ப் பந்தல் சபை

(சி-10842)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா வீரகத்தி

நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த இராசம்மா வீரகத்தி காலமானார். அன்னார் காலஞ் சென்ற வீரகத்தியின் அன்பு மனைவியும், திருச்செல்வம் (சவுதி) நாகேஸ்வரி, மகாலிங்கம் (V.V.M.S) மெசின் கட்டிங், சங்கத்தானை, லயன்ஸ் உறுப்பினர் சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத்தாயாரும் கா. கந்தசாமி உருத்திரமணி, மோனாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும் தவமலர், பிரகாஸ், கோகிலதாஸ், கவிதா, கயேந்திரன், விஜிதா, வனிதா, ரவிந்திரன், சுரேஸ், சுபாஜினி, சுபதினி, ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3- 12- 94 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு மனம் வருந்தி அறியத் தருகிறோம்.

தகவல்
V.V மகாலிங்கம் (மகன்)
தட்டாதெரு சங்கத்தானை
சாவகச்சேரி
(10291)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.